1272

# ஜகன்மோகினி

ஆசிரியை

## வை. மு. கோதைநாயகி அம்மாள்

புதிய நாவல் ஆரம்பம்

1272



# ராஜமோஹன்

அல்லது

## காதலன் மாட்சி

MADRAS

1856

182988.

"ஜகன்மோகினி" ஆபீஸ்

28, தேரடித் தெரு

திருவல்லிக்கேணி, சென்னை.

வருஷ சந்தா ரூ 1/8 தனி காபி அ 2

மலர் 13 இதழ் 6

ஏஜண்டுகள் தேவை

# ஜகன் மோகினி

ஆசிரியை : வை. மு. கோதைநாயகி அம்மாள்.

| 13-வது ஆண்டு ஆரம்பம் | மாதாந்த நாவல் சஞ்சிகை. | ஜனவரி 1936 |
|---|---|---|

ஆங்கில மாதம் முதல் தேதியன்று வெளி வரும்.
எல்லா பத்திரிகை விற்போரிடமும் கிடைக்கும்.

| வருஷ சந்தா ரூ. 1-8 | ஜீவிய சந்தா ரூ. 25 | தனிப்பிரதி அணா 2 |
|---|---|---|


## ஜீவிய சந்தா நேயர்களுக்கு இனாம்.

இனிமேல் நமது நூலாசிரியையால் எழுதப்பட்டு, நம்மால் பிரசுரிக்கப் படும் எல்லா நாவல்களும் இனாமாக அளிக்கப்படும்.

| | | |
|---|---|---|
| பங்கு 1<br>நளினசேகரன்<br>வீரவஸந்தா<br>3 வைரங்கள்<br>படாடோபத்தின் பரிபவம்<br>பிச்சைக்காரக் குடும்பம் | இனாமாக நாவல்கள் வேண்டுமா ? | பங்கு 2<br>பரிமளகேசவன்<br>உத்தமசீலன்<br>கதம்பமாலை<br>சுகந்தபுஷ்பம்<br>கோபாலரத்னம்<br>புத்தியே புதையல் |
| பங்கு 3<br>கௌரீமுகுந்தன்<br>ஸாரமதி<br>சோதனையின் கொடுமை | எத்தனை புதிய சந்தாதாரர்களைச் சேர்த்து முன்பண மனுப்புகிறீர்களோ, அத்தனாவது நம்பர் பங்கிலுள்ள புத்தகங்களில் | பங்கு 4<br>தியாகக்கொடி<br>நவநீதகிருஷ்ணன்<br>சாமளநாதன்<br>ருக்மிணீகாந்தன்<br>மங்களபாரதி |
| பங்கு 5<br>வைதேகி<br>பத்மசுந்தரன்<br>ராதாமணி<br>காதலின் கனி<br>சாருலோசனா | ஒன்று இனாம் | மூன்று புதிய சந்தாதாரர்களைச் சேர்த்து முன் பணம் அனுப்புவோருக்கு ஒரு வருஷ சஞ்சிகை இனாம். |

"ஜகன்மோகினி ஆபீஸ்" திருவல்லிக்கேணி.

ஸ்ரீ




## 1-வது அதிகாரம்

### உத்தமத் தாயின் உயரிய அன்பு

182988.

உலகத்தில் எல்லா வகையான அன்பையும் விடத் தாயாரின் வாத்ஸல்யம் நிறைந்ததும் ப்ரதிபலனைக் கோராததுமான அன்பிற்கு ஈடு வேறு உண்டா! மற்ற எந்த அன்பிலும் ப்ரதிபலனைகத் தன்னிடம் மற்றவர்கள் அன்பு கொள்வதையேனும் மனம் இச்சிக்கும். தாயின் அன்போ, பரிசுத்தமானது; களங்கமற்றது. இதய பூர்வமாக நேசிக்கும் சிறந்த மகிமை வாய்ந்த ஜோதி போன்றதாகும் பத்து மாதம் கருநோய் தாங்கிப்பெற்ற அன்னையின் அத்தகைய அன்பு உலகவியல்பானதும் வியப்பற்றதுமாகும். ஆனல் பெற்ற பாசத்தைவிடப் பெரியதோர்

அபாரமான வாத்ஸல்யத்துடன் கல்யாணியம்மாள் மோஹனனை வளர்ப்பதும் நேசிப்பதுந்தான் உலகம் மெச்சும் உத்தம அன்பாகும்.

கல்யாணி யம்மாளுக்கு மோகனனிடம் உள்ள ப்ரியமும் அளப்பரிய வாஞ்சையும் கூறத்திறமேயன்று. சதா மோகனனின் க்ஷேமத்தைப்பற்றி நினைத்து கடவுளைப் பிரார்த்தித்து வேண்டுவாள். அவளுடைய நோக்கம் முற்றும் தான் எடுத்து வளர்க்கும் பையன் சாமான்யமாக இருக்காமல் உயர்தர மனிதனாக ஆய்விடவேண்டும் என்ற பேராவல் கொண்டதாயிருந்ததால் அவளது தொழிலாகிய காய் கறி விற்கும் தொழிலைச் செய்யும்போது தான் காய்கறி கொடுக்கும் வாடிக்கை வீடுகளில் பையனுக்கு துணி, சொக்காய், பலகை, பலப்பம், நோட்டு புத்தகம் முதலியன வெகு அன்பாகப் பேசிப் பெற்று வந்துவிடுவாள். பள்ளிக்கூடச் சம்பளமும் இல்லாமல் இலவசமாகவே படிக்கும் பள்ளிக்கூடத்தில் மோகனின் 8-வது வயதில் தான் முதலில் சேர்த்தாள்.

கல்யாணிக்கு யாராவது ஓர் தின்பண்டங் கொடுத்தால் அதை அவள் வாயில் போடவே மாட்டாள். உடனே ஒரு கந்தத்துணியில் சுற்றி அதை இடுக்கிக்கொள்வாள். "ஏண்டி கல்யாணீ! நீ தின்பதற்குக் கொடுத்தால் மூட்டை கட்டுகிறாயே!" என்று யாராவது கேட்டால் கல்யாணி அதிகம் வார்த்தையை வளர்க்கமாட்டாள். "நான் தான் பிள்ளை பெறாத மலடி. நீங்களுமா அப்படி. பிள்ளை ஆசையைக் கொள்ளைவிடுவீர்களா?" என்று நகைத்துக்கொண்டே அவர்கள் மனத்தில் படும்படியாகக் கூறிவிட்டுப் போய்விடுவாள்.

மோகனனும் அவனுக்கு புத்தி தெரிந்த நாள்முதல் கல்யாணியையே தன்னுடைய தாயாக எண்ணி வெகு அன்பாயும் பய பக்தியுடனும் நடப்பான். அவள் செல்லத்திலேயே கொஞ்சலாக "மோகன்! இதோ பாரு. இந்த பாட்டு உனக்குப் படிக்கத் தெரிகிறதா பாரு. நீ எம்மட்டும் படிக்கிறாயோ பார்க்கலாம். கண்ணல்ல!" என்று கூறி அவனை மடியில் உட்கார வைத்துக்கொண்டு மகிழ்வாள்.

மோகனனும் வெகு ஆவலுடன் "அம்மா! நான் படிக்கிறேன்

கேளம்மா! எனக்கு நன்ருகப் படிக்கவந்துவிட்டதென்று வாத்தியார் சொல்லுகிருர். அம்மா! இதோ படிக்கிறேன் கேளு.

"ஓடி விளையாடு பாப்பா! நீ ஒருவரையும் வையாதே பாப்பா!"

அம்மா! இந்த பாட்டு வேடிக்கையாக இருக்குதே! பாப்பா! பாப்பா! என்று இருக்கிறதே ஏம்மா! பாப்பான்ன என்ன அர்த்தம்?" என்று கொஞ்சலாகக் கேட்டுவிட்டு அவளது பதிலை ஆவலுடன் எதிர்பார்ப்பான்.

இதுகேட்ட கல்யாணியம்மாளின் உள்ளம் பொங்கி மகிழ்ந்துவிட்டது. "கண்ணே! இது உன்போன்ற பாப்பாக்களுக்காக ஓர் தேச பக்த சிகாமணி, கவியரசராகிய சுப்ரமண்ய பாரதியார் செய்திருக்கிருர். நான் உனக்குச் சொல்லும் புத்திமதிகள்போலவே இதிலும் இருக்கிறது பார்த்தாயா? நீ இப் பாட்டைப் படி. நான் உனக்கு இதன் அர்த்தம் சொல்லுகிறேன். அதன்படியே நீ நடந்து நல்ல பையனென்கிற பெயர் வாங்கவேண்டும். அதற்காகத்தான் இப் பாட்டை உனக்கு வாங்கி வந்தேன்." என்று கூறிப் பாட்டின் ஒவ்வொரு பதத்திற்கும் அர்த்தம் சொல்லிக் கொடுத்து அதன் மூலமே மோகனுக்கு நல்ல அறிவு உண்டாக்குவாள்.

மோகன் பள்ளிக்கூடம் சென்றிருக்கையில் பள்ளிக்கூடப் பிள்ளைகளுடன் அனுவசியமாகச் சேராமலும்,சில்லரைச் சண்டைகள் போடாமலும் அந்த பாப்பா பாட்டை நினைத்துக்கொண்டே நடப்பான். மிகவும் ஏழைப் பையனுகிய இவனைக் கண்ட சில பணக்காரப் பையன்கள் அலக்ஷியமாக எண்ணி ஏளனம் செய்து பரிகசிப்பார்கள். அழுக்கு சொக்காய்க்காரா! கந்தத்துணிப்பையா! கிழிந்த புத்தகத்தைப் பாரு. பிச்சைக்காரப் பையன்." என்று கேலி செய்து நகைப்பார்கள்.

இதைக் கேட்டதும் மோகனுக்கு அழுகையும் கோபமும் வரும். உடனே தன் தாயார் சொல்லிக் கொடுத்த பாட்டு நினைவிற்கு வரும். சில சமயம் பேசாது போய்விடுவான். சில சமயம் ஆத்திரந் தாங்கமாட்டாது திட்டிவிடுவான். பள்ளிக்கூடத்தில் என்ன நடங்

தானும் அதை அப்போதைக் கப்போது தாயாரிடம் கூறி விடுவான். கல்யாணி அதற்குத் தக்கவாறு கண்டித்து புத்தி கற்பிப்பாள்.

இன்னிலைமையிலேயே மோகன் வெகு புத்திசாலியாயும், மகா நற்குணவானுயும், பணிவு, ஒழுக்கம், பக்தி முதலியவைகளில் சிறந்தவனுயும் சிறு பிராயம் முதல் பழகி விருத்தியடைந்து வந்தான். தவருன வழியில் நடக்கும் சில பணக்காரப் பிள்ளைகளுக்கும் இவன் புத்தி புகட்டக்கூடிய அபார அறிவைப் பெற்றுவிட்டான். உபாத்தியாயர்களெல்லாம் "நல்ல பையன். ஏழையாயினும் என்ன குணம்! என்ன அடக்கம்! என்ன பாரபுத்தி!" என்று கொண்டாடும் நிலைமைக்கு வந்துவிட்டான்.

பசியாயிருந்தால், பட்டினி கிடந்தாலும் கிடப்பானே யன்றி பிறர் வீட்டில் பன்னடைத்தனமாகப் புசிக்க விரும்பமாட்டான். வேண்டி வேண்டி அழைத்தாலும் வெகு வணக்கமாயும் நகைத்துக் கொண்டும் தட்டிவிடுவான். யாராவது தன்னுல் ஒரு காரியம் ஆகவேண்டுமென்று கேட்டால் எத்தனை நேரமாயினும் அதை மறுக்காமலும், நாணயமாயும் செய்து கொடுத்துவிட்டுத்தான் வீட்டிற்கு வருவான். மிகவும் ஏழைக் குடும்பமாகையால் இரவில் விளக்குக்குக் கூட எண்ணெயகப்படாது. அவ்வூர் பிள்ளையார் கோயிலிலுள்ள லாந்தரின் கீழ் நின்றுகொண்டே தன் முக்கியமான பாடங்களைப் படிப்பான். இதைக்கண்ட பணக்காரப் பிள்ளைகள் பரிகஸித்துப் பேசுவார்கள்.

இவன் படிக்கும் பள்ளிக்கூடம் ஒரு சிறிய ஜில்லா போர்டு பள்ளிக்கூடமாகையினுல் 8 வகுப்பு வரையில்தான் அங்கு இருந்தது. அதற்கே உபாத்தியாயர்களுக்குச் சரியான சம்பளங் கொடுக்க மாட்டாது கண்ணீர் வழியச்செய்யும் பரிபவம் தாண்டவமாடிக்கொண்டிருந்தது. ஆகையினுல் வகுப்புக்களைப் பெருக்குவது எங்ஙனம்?

கல்யாணியம்மாள் பரம ஏழை. தினம் பின்மாலை 3 மணிக்கே எழுந்து சந்தைக்குச் சென்று காய்கறிகள், வாழை இலை, கீரை,

இவைகளை வாங்கி வந்து வீதியில் பகலெல்லாம் திரிந்து விற்பாள். சில நாளைக்கு போட்ட முதலாவது கிடைக்கும். சில நாளைக்கு அதுவும் மோசமாகிவிடும். சில நாளைக்கு காய்கறிகள் முத்தலாயோ, சொத்தலாயோ இருந்தால் வாங்குபவர் பொறுக்கிப் பொறுக்கிப் பாதியையும் கழித்துவிடுவார்கள். இதில் பெரிய நஷ்டமே வந்து விடும். "கடவுளே! இன்று வியாபாரம் நன்ருக ஆகவேண்டும்; நல்ல மகராஜி கூடையில் கையை வைக்கவேண்டுமே! ஆண்டவனே!'' என்று வேண்டிக்கொண்டே புறப்படுவாள்.

ஒரு நாளைக்கு முதல் போக நான்கு அணு அதிகம் கிடைத்து விட்டால் அன்று தனக்குப் பெரிய புதையல் கிடைத்ததுபோல சந்தோஷப்படுவாள். இம்மாதிரி கிடைப்பது என்ருே ஒரு நாள் தான். இந்நிலைமையில் வீட்டு வாடகை ஒரு சிறிய தனி அறைக்கு 2 ரூபாய் கொடுக்கவேண்டும். மோகனும் தானும் சாப்பிடவேண்டும். முறை விளக்கு ஏத்தவேண்டும். முறை வாசல் பெருக்கிக் கோலம் போட துடைப்பமும் கோலமாவும் வாங்க வேண்டும். பையனுக்கு புத்தகமோ, பலகையோ துணிமணியோ எக் காலமும் யாசகத்திலேயே வாங்க முடியுமா? மத்தியில் அவைகளும் வாங்கவேண்டும். இத்தனைக்கும் ஒரு ஏழை என்ன செய்வாள் பாவம்! தன் மகனுக்கு நன்ருகப் பாடம் கற்றுக்கொடுக்கும் பொருட்டு அவன் உபாத்தியாயர் வீட்டில் அம்மாளை ஸிநேகம் செய்து நயமாயும், நல்ல பிஞ்சாயும் காய்கறிகளைக் கொடுத்து சிரித்த முகமாகப் பேசி "அம்மா! ஐயா கிட்ட சொல்லி மோகனை சற்று கவனித்துக் கொள்ளச் சொல்லுங்க. தாயில்லாத பரதேசிப் பையன் உங்க தயவுதான் இருக்கவேண்டும்.'' என்று கூறி கெஞ்சிக் கேட்பாள்.

சில உபாத்தியாயர்களைப்போல பையன்களை வீட்டு வேலை களைச் செய்யச் சொல்வதும், கடைக்கு அனுப்புவதும் முதலிய காரியங்களைச் செய்ய ஏவாமல் முனுசாமிப்பிள்ளை மோகனின் புத்தி சாலித்தனத்தையறிந்து அவனிடம் அன்பாயும் அக்கறையுடனும் பாடங்கள் சொல்லிக்கொடுத்து வந்ததனுல் மோகன் வெகு சுறு

சுறுப்பாயும் ஊக்கமாயும் 8-வது வகுப்பு வரையில் படித்து பாஸ் செய்துவிட்டான்.

அதற்குமேல் மோகனனுக்குப் படிக்கவேண்டுமென்ற ஆசை இருந்தபோதிலும் வறுமை தேவதையின் ஆட்சியில் இடங்கிடைக்கா மல் போய்விட்டது. கல்யாணிக்கு வயதாகிக்கொண்டே வருவதால் நாளுக்கு நாள் பலவீனம் ஏற்படுவது சகஜமல்லவா? அவளால் முன் போலக் காய்கறிகளைத் தூக்கிக்கொண்டு வெய்யிலிலும் மழையிலும் தெருத் தெருவாய் அலைவதற்குச் சக்திஇல்லாது ஆயாஸப்படவாரம் பித்தாள். இந்நிலைமையில் மேலே படிக்க வைக்க சக்தி ஏது? வெளியூருக்குச் சென்று படிக்கும் வகைதானேது. ஆகையால் படிப்பு அம்மட்டுடன் முடிவு பெற்றது.

வேலைக்குத் திண்டாடும் கூட்டத்துடன் மோகனனும் சேர்ந்து விட்டான். எங்கு தேடி யலைந்தாலும் ஒன்றும் கிட்டவில்லை. தான் எப்படியாகிலும் ஒரு பத்து ரூபாயாவது சம்பாதித்து அதைக் கொண்டு தன் தாயை உட்காரவைத்துப் போஷிக்கவேண்டும். அவளை இனி ச்ரமப்படுத்தக்கூடாது என்கிற எண்ணமே மோகன னின் மனத்தில் தோன்றி சதா வேலைசெய்துகொண்டிருந்தது. தனக்காகத் தன் சரீரத்தைச் செருப்பாயுழைத்து படாத கஷ்டங் களையும் பட்டு தன்னை வளர்த்த வாஞ்சைக்கு ப்ரதி தான் தன்னு டைய உழைப்பினல் தாயாரைக் காப்பாற்றவேண்டாமா, கடவுள் என்றைக்கு சகாயம் செய்வார்? என்று சதா காலமும் இதே எண்ணத்துடன் ஏங்குவான்.

"அம்மா! எனக்கோ வேலையகப்படவில்லை. நான் இனி இக்காய்கறிகளை விற்று வருகிறேன். நீ அலையவேண்டாம். என்னிடங் கொடுத்துவிடு. நான் வீணுகத் திரிவதில் பயனென்ன? நான் இனி கடைக்குச் சென்று வாங்கி வருகிறேன்" என்று கேட்டான்.

கல்யாணி:—மோகன்! உன்னைக் காய் கறி விற்க தெருத் தெரு வாய் அலைய வைக்கும் நோக்கம் எனக்கு உண்டாயின் நான் இத் தனை கஷ்டப்பட்டு உன்னை ஓர் கல்வியறிவுள்ளவனுகச் செய்திருக்க மாட்டேன். நீ தலையில் கூடை சுமக்க நான் பாடுபடவில்லை. குல்லா

யும் தலைப்பாகையும் தரிக்கவே வெகு காலமாக ஆசிக்கின்றேன். மோகன்! என்னிடம் நீ கொண்டுள்ள அன்பை நானறியமாட்டேனோ; உன் சுக வாழ்வே என் இன்ப வாழ்வாகும். அது போல வேலையிலிருந்து சொல்ப வருமானம் கொணர்ந்தாலும் போதும். அதை என் கண் குளிரக் கண்டு மனங்களிப்பேன். இந்த எண்ணம் எனக்கு இன்று உதித்ததல்ல. உன்னை என்னிருகைகளையும் ஏந்தி என் இதய பரிபூரணமான அன்போடு வாங்கிக்கொண்டேனே அன்றே உண்டாகிய எண்ணமாகும் இது. அதைப் பூர்த்தி செய்து வைத்தால் போதும்.

மோகன் :—அம்மா! பெற்ற தாயாக விருந்தால் கூட உங்களைப் போன்று அன்புடன் வளர்க்கமாட்டாள். என் பாக்கியந்தான் தங்களை நான் அடைந்தேன்.........அம்மா!.......என்னைக் கையேந்தி வாங்கியதாகத் தெரிவித்தீர்களே! அந்த விவரங்களை நான் இது பரியந்தம் அறியவில்லை. அறிய விரும்பியதுமில்லை. இன்று ஏதோ இதையறிய வேண்டுமென்று என்னுடைய மனம் ஆசிக்கின்றது. என்னைப் பெற்ற அன்னை யாரு?என் குடும்ப வரலாறுகள் என்ன?'' என்ற விஷயங்களைக் கூற வேண்டுகிறேன்.

கல்யா :—இதற்கும் ஒரு காலம் வரும்; பிறகு சொல்லலாம் என்று இருந்தேன். இதை நீ யறிந்தால் விசனமும் ஆத்திரமும் உண்டாகும். அவ்வாறு இனி உண்டாகிப் பயனில்லை. அதை அடக்கிக்கொள்ளு. இது தான் முக்கியம்—என்றாள்.

---

## 2-வது அதிகாரம்

## நினைத்த அளவில் மனத்தை உருக்கும்

தனக்கு மிகவும் அவசியமான விஷயத்தை அறியும் ஆவல் மோஹனனை கப்பிக்கொண்டது. அவன் கல்யாணியம்மாளின் வாக்கிலிருந்து என்ன வரப்போகிறதோ யென்று வெகு கவனமாய் நோக்கினான்.

“அப்பா! மோகன்! நான் ஒரு காலத்தில் செல்வத்துடனும் சுகபோகத்துடனும் வாழ்ந்தவள். என்றும் இப்படியே பிச்சைக் காரியாகப் பிறக்கவில்லை. வீடு, வாசல், நகை, நட்டு எல்லாம் இருந்த இடம் தெரியாமல் மறைந்தன. உன் தாயாரும் தகப்பனும் வெகு அன்யோன்யமாயும் ஒற்றுமையாயும் குடும்பம் நடத்தி வந்தார்கள். அவர்களிடம் இரண்டு பசு மாடுகளும் இரண்டு எருமை மாடுகளுந் தான் ஆஸ்தியாக விருந்தன. அந்த பாலை க்ரமப்படி பாலாகவும் தயிராகவும் நெய்யாகவும் விற்று சாணத்தை விறட்டி தட்டி விற்று அவர்கள் காலக்ஷேபம் செய்து வந்தார்கள்.

அக்காலத்தில் உன் தாயார் எனக்கு வாடிக்கையாகப் பால், தயிரு, நெய்யி, விறட்டி நான்கும் தவறாமல் தினந்தோறும் கொண்டு வந்து கொடுப்பாள். அந்தம்மாள் இயற்கையிலேயே சற்று கட்டுமத்தான தேக அமைப்பும்,முகவசீகரமும் பொருந்தியவள்.நெத்தியில் குங்குமப்பொட்டும், கையில் கண்ணாடி வளையல்களும், கழுத்தில் தாலிசரடுந்தான் நகைகள். அதுவே அந்தம்மாளுக்கு பளிச் சென்றிருக்கும். அந்தம்மாள் அதிகாலையில் பால் கொண்டு வருவாள். 9 மணிக்குத் தயிர் கொண்டு வருவாள். மாலை பால் கொண்டு வருவாள். விறட்டியும் நெய்யும் நடுப்பகலில் கொண்டுவருவாள். ஆக தினம் நான்கு தடவைகள் என் வீட்டிற்கு வருவதால் அந்தம்மாளிடத்தில் எனக்கு அத்யந்த ப்ரீதியும் ஓர் மதிப்பும் உண்டாகியது. என் வீட்டில் மிஞ்சுகிற சாதம், குழம்பு முதலியவைகளை அந்தம்மாளுக்கே கொடுப்பேன். அத்தனை பழக்கமேற்பட்ட பிறகு அந்தம்மாள் தனக்குப் பொழுது போகாத நேரத்திலும் என்னிடமே வந்து பேசிக்கொண்டிருப்பாள். எனக்குள்ள சில வேலைகளையும் செய்வாள். நாங்கள் இருவரும் சகோதரிகளைப்போலவே ஆய் விட்டோம்.

சந்தோஷத்தின் எல்லையை என்றுமே யாருமே காணமுடியாது. அது போன்று துக்கத்தின் எல்லையும் காணமுடியாது. குளிர்ந்த கிரணங்களுடன் சந்திரன் உதயமாகிவிட்டான் என்று மகிழ்ச்சி யடைவதற்குள்ளேயே அஸ்தமித்து விடுவதை நாம் கண்டு ஓர் ஆதாரமாகக் கொண்டு தேறும் பொருட்டே கடவுள் அமைத்திருக்

கிறாரல்லவா! அதோடு கெடுவான் கேடு நினைப்பான். என்ற பழ மொழியும் வீணாகுமா! பின்னால் நேரப்போகும் ஆபத்தின் உருவம் முன்னால் மோகத்தில் மறைக்கப்பட்டு அத்தனையும் கானல் நீர் போன்று சந்தோஷமாகத்தான் தெரியும்.

அதுபோல என்னுடைய கணவருக்கு கேடு வரும் பின்னே மதி கெட்டு வரும் முன்னே என்று மதி கெட்டது. எனது சகோதரி யைப்போன்றிருந்த அந்தம்மாளிடத்தில் துர்ப்புத்தி கொண்டு மனத் தில் கபட எண்ணத்துடன் அவளை நேசிக்கவாரம்பித்தார். இதை நானும் அறியமாட்டேன். உன் தாயும் அறியமாட்டாள். அப் போதுதான் உன் தாயார்—வெகு நாட்களுக்குப்—பிறகு உன்னை கர்ப்பவதியாகி இருக்கிறாள்.

அன்பு காட்டியவருக்குத் துன்பம் விளைவிக்கத் துணிந்து என் புருஷன் பணங்கொடுக்கும் சாக்கை வைத்துக்கொண்டு அந்தம்மா ளின் வீட்டிற்குப் போகத் தலைப்பட்டார். நானும் சகஜமாக எண்ணி விட்டேன். வீட்டிற்குப் போய் சில தினங்களில் தன் த்ரோக சிந் தையைக் காட்டி அந்தம்மாளை மோசம் செய்ய இந்தப்பாவி ஆரம்பித் தானும். இதனால் உன் தாயார் கதிகலங்கிப் போய்விட்டாள். கண்ட படி திட்டி "இனி என் வீட்டிற்கு வராதே!" என்று கண்டித்து விட் டாளாம். இதை என்னிடம் சொல்ல முதலில் அஞ்சினாளாம். ஏனெனில் தான் ஓர் ஏழை. அவன் ஓர் பெரிய மனிதன். அவன் மீது குற்றஞ்சொன்னால் நான் என்ன நினைப்பேனோ, தன் மீதே பழி சுமத்தி விடுவேனோ என்றெல்லாம் பயந்தாளாம்.

பின்னும் இம்மனிதன் அவ்வாறு செய்ததால் அந்தம்மாள் என்னிடம் சொல்லத் துணிந்து எல்லாவற்றையும் சொல்லி முறை யிட்டாள். பூர்ண கர்ப்பிணியாகிய அந்தம்மாள் கூறியதைக் கேட்ட தும் எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. உடனே அவளைத்தேற்றிப் பின்னர் "நீ வீட்டிற்குப்போ; நான் சற்று பொறுத்து திடீரென்று வருகிறேன்" என்று கூறியனுப்பிவிட்டேன். என் மனம் தத்தளித் தது. என்னால் தாங்க முடியாத வேதனை செய்தது. முதலில் தாயார் மீதே நான் சந்தேகங்கொண்டு இது பொய்யாகவிருக்குமோ வென்று

எண்ணினேன். எதற்கும் நேரில் சென்று விசாரித்துப் பார்த்துவிடுவோம் என்று எண்ணியே அவ்வாறு சொன்னேன். பிறகு என் புருஷன் வந்து சாப்பிட்டு விட்டு வழக்கம்போல வெளியே போவதாகச் சொல்லிவிட்டுப் போனுர். நானும் சற்று நேரத்திற்கெல்லாம் அவள் வீட்டிற்குச் சென்றேன்.

அப்போது உன் தந்தை என் புருஷனைக் கண்டபடி திட்டி அவமானப்படுத்தி அடித்துக்கொண்டிருந்தார். உன் தாயும் திட்டியவாறு கண்ணீர் விடுகிருள். என் புருஷன் அபாரமான கோபத்துடன் அருகிலிருந்த அடுப்பில் தயிருக்காக பால் காய்ந்துகொண்டிருந்ததை அப்படியே தூக்கி—எப்படித்தான் மனமும் கையும் துணிந்ததோ—உன் பிதாவின் தலைமீது கொட்டிவிட்டான்.

பால் நன்ருக சுண்டக் காய்ந்து கொதித்துக்கொண்டிருந்ததால் அம்மனிதன் புழுவைப்போலத் துடித்து வீறிட்டவாறு கீழே விழுந்துவிட்டான். உன் தாயோ அலறி கர்ஜித்தாள். மூர்ச்சையாகிவிட்டாள். இத்தனை பயங்கரமான கோர சம்பவங்களும் கண் மூடி திறப்பதற்குள் ஆய்விட்டன. இவைகளைப் பார்த்துக்கொண்டிருந்த எனக்கும் கதி கலங்கிப்போய்விட்டது.என்னை மறந்து நானும் கூச்சலிட்டுக் கத்திவிட்டேன். இமை கொட்டுவதற்குள் என் புருஷன் ஓட எத்தனித்தான். அந்தக்ஷணமே கும்பல் கூடிவிட்டது. என் புருஷனின் செய்கையை ஏற்கெனவே அவ்வீட்டில் குடி இருப்பவர்கள் கவனித்துச் சந்தேகப்பட்டுக் கொண்டிருந்தார்களாம். இந்த அக்ரமத்தை அவர்களும் கண்டுவிட்டதனுல் கெட்டியாகப் பிடித்துக்கொண்டார்கள்.

அந்தோ! அந்த சமயம் என் மனமும் உன் தாயாரின் மனமும் எப்படித்தானிருந்திருக்கும். இப்போது நினைத்தாலும் சங்கடம் செய்கிறது. என்னிலையை என்னுல் விவரிக்கவே முடியவில்லை. உடனே போலீஸாரும் வந்துவிட்டார்கள். நானும் மயக்கமடைந்து விழுந்தேன். உன் தந்தையை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனுர்கள். கொதிக்கும் பாலைக் கொட்டியதால் தோல் வயண்டு ரணங் கண்டு மறு தினமே உயிர் நீத்தார். போதுமா! ஆத்திரக்காரனின்—காமுகனின்—செய்கையின் பலன்!

உடனே விசாரணை நடக்கவாரம்பித்தது. உன் தாயாரையும் ஆஸ்பத்திரியிலேயே போட்டுவிட்டார்கள். நான் என்னதான் செய்வேன்? என் கணவனுகவிருந்தபோதிலும் குற்றத்தைச் செய்யும் போது என் கண்ணுலேயே கண்ட பிறகு, அம் மனிதனின் உயிரும் தத்தளிக்கையில் நான் குற்றத்தை மறைப்பதா! அன்றி கட்டிய கணவனைக் காட்டிக்கொடுப்பதா! அவ்விரண்டு பாபங்களில் எது சிறந்தது. எது தாழ்ந்தது. இரண்டும் பாதகமன்றோ! மேல் குறித்த எண்ணங்கள் என்னைக் கப்பிக்கொண்டு சித்திரவதை செய்துவிட்டன.

என்னல் எந்த பக்கமும் போக முடியாமல் தத்தளித்தேன். ஒற்றுமையானதும் தேனும் பாலும் போன்றதுமான தம்பதிகளின் இனிய வாழ்க்கை சிதறியது. கற்பிற்கரசியாக விருந்த ஓர் உத்தமியின் மனம் பதறி எரிந்தது. பூர்ண கர்ப்பிணியின் இதயம் வெடித்தது. என் கண்ணுரக் கொலையைக் கண்ட பிறகு நான் என்ன செய்வது. அதை மறைத்துப் பேசி அதர்மத்திற்கு நான் துணிந்தாலும் மற்ற ஜனங்கள் அதை விடுவார்களா! அந்தோ! ஒரு அல்ப விஷயத்திற்காக பெரிய கொலையைச் செய்துக் குடி கெடுத்தவனுக்கு நாம் பரிவதா ... சீச்சீ ... அவ்வுயிர் என்ன துடி துடிக்கும்....என்று நான் இரவு முற்றும் கதறினேன்; தவித்தேன்; தத்தளித்தேன். போலீஸார் வாக்குமூலங் கேட்டார்கள். 'எனக்கு ஒன்றும் சொல்ல முடியவில்லை; மயக்கமாகவிருக்கிறது' என்று கூறிவிட்டேன்.

பின்மாலை 4 மணி இருக்கும். ஆஸ்பத்திரியிலிருந்து ஆள் வந்து என்னை உன் தாயார் அழைப்பதாகத் தெரிவித்தார்கள். என்னிதயம் தவிக்க ஓடினேன். உன் தாயாருக்கு ப்ரஸவ வேதனையின் அவஸ்தை அதிகரித்துவிட்டதாயும் திடீரென்று இக்கதி நேர்ந்துவிட்ட அதிர்ச்சியினுல் ரத்த ஓட்டம் அதிகரித்து நாடியும் இதயமும் வேகமாய் ஓடுவதாயும்,இந்தம்மாள் பிழைப்பது இனி சந்தேகம் என்றும்,வயிற்றிலுள்ள சிசுவும் சந்தேகந்தான் என்றும் என்னிடம் ரகஸியமாக டாக்டர் கூறிவிட்டார்.

அந்தோ! பயங்கரம்! பயங்கரம்!! ஒரு மனிதனின் கேவலமான அல்ப இச்சைக்கு மூன்று உயிர்களைப் பலி கொடுப்

பதா! 'மூன்று உயிர்களைக் கொலை செய்தாயே!......அட பாவி! நீ என்னைக் கட்டிய கணவனாகவிருப்பினும் நிரபராதிகளான மூன்று உயிர்களை எமன்போலக் குடிக்க வந்த உனக்கா நான் ஆதரவு கொடுப்பேன்? கொலைக்காரனல்லவென்று சொல்லுவேன்....சீச்சீ! த்ரோகி! கொலைப்பாதகா!'' என்று தத்தளித்த வண்ணம் உன் தாயினிடம் சென்றேன்.

மோகன்! இப்போது வருடங்கள் பலவாகிய போதிலும் என்னால் சொல்ல முடியவில்லை. கண்ணீர் பெருகுகிறது. தொண்டையை அடைக்கிறது. அன்று உன் தாயின் தரிசனம் இன்றும் என்னகக் கண் முன்பு அப்படியே யிருக்கிறது.நான் உன் தாயருகில் போய் "முத்து!'' என்று கூப்பிட்டேன். மேலே கூற சாத்யப்படவில்லை. கண்ணீர் வழியத் தேம்பித் தேம்பி அழுதுவிட்டேன்.

முத்து என்ற அந்தம்மாளுக்கு இதய உடைப்பின் வேகம் மூச்சுத் திணறியதுபோல ஸ்வாஸம் வருகிறது. தண்ணீர் வெள்ளமாக தேகத்தில் கொட்டுகிறது. கண்ணும் சரியானபடி திறக்க மாட்டாது ஒருவித மக்கலையடைந்துவிட்டது. என்னைக் கண்டதும் என்னைத் தன்னருகில் உட்காரச் செய்து சேர்த்துக் கட்டிக்கொண்டாள். என் கன்னத்தில் இரண்டு அன்பும் ஆவலும் மயமான முத்தமிட்டுக் கிள்ளினாள். முகத்தைத் தடவினாள். வேதனையின் பாதையினால் மத்தியில் மத்தியில் அலற்றினாள். ஐயோ! வென்ற சப்தத்தைக் கூறவே இல்லை. க்ருஷ்ணா க்ருஷ்ணா! வென்று தன் கண்ணீர் பெருகக் கூறினாள்.

கடவுள் அவளை அதிக ச்ரமப்படுத்தாமல், பட்ட சிரமத்திற்குப் பரிசாக தங்க விக்ரகம் போன்ற ஓர் ஆண் மகவை—உன்னை—வெகு விரைவிலேயே கொடுத்துவிட்டார். நீ பிறந்த 5 நிமிடம் வரையில் உன் தாயார் ப்ரக்ஞையற்றுக் கிடந்தாள். உயிர் போய் விட்டதோவென்று பயந்தேன். 5 நிமிடம் சென்ற பிறகு கண்ணைத் திறந்தாள். கலத் தண்ணீரை உதிர்த்தாள். வைத்தியர்கள் தம்மாலான சிகிச்சைகளைச் செய்துகொண்டே இருக்கிறார்கள்.

"முத்தம்மா! உனக்கோர் ஆண் குழந்தை பிறந்தது. இதோ! பாரு." என்றேன். தாதி குழந்தையைக் காட்டினாள். நீ பெரிய குரலில் கத்திக்கொண்டே இருந்தாய். முத்தம்மா ஒரு விதமான சோகச் சிரிப்பு சிரித்துக்கொண்டே "உம்...எனக்கா மகன் பிறந்தது.... இல்லை!... இல்லை.... உனக்குப் பிறந்தது. இந்த மகன் உனக்குச் சொந்தம். கடவுள் என் மூலம் உனக்குக் கொடுத்தார். ஐயோ! பேச முடியவில்லையே!.... என்னமோ செய்கிறதே.... நான் கஷ்டப்படுகிற ஏழைக் குடும்பத்திலிருக்கையிலும் ஒரு குழந்தைக்கு ஏங்கினேன். குழந்தையின் மோகம் என்னுள்ளேயே தாண்டவமாடியது. ஆனால்.... ஆனால் என் மோகமெல்லாம் மேகமாகிவிட்டது.

"அம்மணீ! இக் குழந்தையை என் முகத்திற்கு நேராக விடுங்கள்." என்றாள். தாதிவிட்டாள். உன்னைத் தடவிக்கொடுத்தாள். மூச்சுத் திணறும் கொடிய அவஸ்தையோடு உனக்குப் பல முத்தங்களிட்டாள். "கண்ணா! என்னாசைக் கிளியே! என் மோகத்தைத் தீர்க்க வந்த மோகனுவதாரமே!... ...இல்லை......இல்லை...என் அம்மாளின் மோகத்தைத் தீர்க்க இனி அப் பக்கம் செல்வாய். நான் மகா பாவி நான் கொடும்பாவி...உன்னை வைத்து மகிழ்ந்து களிக்கும் பாக்யம் பெறாத அதிர்ஷ்டஹீனை. அபாக்யவதி.

அம்மா!...என் ஸ்வாஸம் திணறுகிறது. மாரையடைக்கிறது. முத்தம்மாள்! முத்தம்மாள்! முத்தம்மாள்! என்று என்மேல் உயிரை வைத்தது பெரிதல்ல. இனி இக் குழந்தை உங்களுடையது. நடந்துபோனதை இனி நினைத்துப் பலனில்லை. என் விதி. என் கணவரின் விதி. எங்கள் இருவரின் பாபந்தான் உங்கள் புருஷனின் புத்தி கெட்டது. நீங்கள் மகா பரிசுத்தவதி. மகா உத்தமி. உங்கள் கணவர் செய்த சதிக்கு இந்த பச்சை மண்ணாகிய பாலகனை வளர்த்துக் காப்பாற்றுவதுதான் தக்க ப்ராயச்சித்தமாகும். இதுதான் சரியானது.

அம்மா! பிடியுங்கள்! பிடியுங்கள்! நான் வளர்க்கிறேன் என்று வாக்குக் கொடுங்கள். இனிமேல் என் மனங் களிக்கும்படியாகத் தாங்கள் செய்யும் வேலை இதுதான். இதோ இந்த ஆஸ்பத்திரிக்

காரர் உடன்படச்சாக்ஷி. இதைப் பெற்றுக்கொள்ளுங்கள்'' என்று கல்லும் கரையும்படியாய் கண்ணீர் பெருகக் கூறினாள்.

அந்தோ! மோகன்! அதுபரியந்தம் புத்திர பாக்ய மில்லாத மலடியாகிய எனக்கு என்னை யறியாது ஓர் ஆநந்தமும் வாத்ஸல்ய மும் சுறந்தது. கண்கள் வெள்ளமாக நீரைப் பெருக்கின. உன் தாயின் கையால் கொடுக்கப்பட்ட உன்னை கடவுள்மீது ஆணையைச் செலுத்தி இரு கைகளையும் நீட்டி அன்பாக வாங்கிக்கொண்டு என் னாராவமுதமே என்று மகிழ்ந்து முத்தமிட்டேன்.

உன் தாயாருக்கு என்னுயுள் உள்ள வரையில் உன்னைக் கண் மணிபோலக் காப்பாற்றுவதாகச் சத்தியம் செய்துக் கொடுத்தேன். உன் தாயார் ஆநந்தமும் சோகமும் கலந்து ஒரு பெருத்த சிரிப்பு சிரித்தாள். “ஹா! மறந்தேனே. என் கணவரின் நிலைமை எப்படி இருக்கிறது. அவருடைய ஞாபகம் சரியாகவிருந்தால் சற்று இந்த குழந்தையை அவருக்குக் காண்பித்து வாருங்கள் என்று வேண் டினாள்.

ஆஸ்பத்திரி அதிகாரிகளும் மனமிளகி அவர்களே உன் பிதா வின் படுக்கைக்கு உன்னைக் கொண்டுபோய் காட்டினார்கள். அவர் ரண ஜன்னியின் பாதையிலும் உன்னைக் கண்டு பரம சந்தோஷங் கொண்டு பார்த்தார். ஆனால் தோல் வயண்டுவிட்டதால் கையால் தடவ முடியாது கட்டு கட்டி இருந்தது. “முத்து! முத்து எப்படி இருக்கிறாள்?'' என்றார்.

இவருடைய இந்த நிலைமையில் எதுவும் சொல்லக்கூடா தென் றெண்ணி“சௌக்யமாயிருக்கிறார்கள்.உங்களைப்பற்றித்தான் கவலைப் படுகிறார்கள்.'' என்று தாதி கூறினாள். “என்னுடைய இந்த நிலைமை யைச் சொல்லாதீர்கள். அவரும் குணமடைந்திருக்கிறார்'' என்று கூறுங்கள். என்று கூறியபிறகே என்னைப் பார்த்தார். அவர் பரி தாபத்தைக் கூறத்திறமன்று.

கண்ணீர் பெருக “அம்மா! சூரியன் உதயமாகிவிட்டது. ஆனால் என் வாழ்க்கையின் அஸ்தமனம் சமீபித்து விட்டது. மகா உத்தமி

யாகிய உங்களுக்கு இத்தகைய கணவன் கிடைத்தது பூர்வ ஜன்மத் திப்பாபம்.........உம்.......இனி அச்சனியனை நினைக்கவேண்டாம் நான் இனி பிழைக்கமாட்டேன். முத்தம்மாளையும் குழந்தையை யும் பார்த்துக் கொள்ளுங்கள். நீங்கள்தான் திக்கு. நீங்கள்தான் கதி. நீங்கள் தான் தெய்வம்......பேச முடியவில்லை...குழந்தை... குழந்தை...என்றார். ஆயாசத்தால் கண்கள் சோர்ந்துவிட்டன.

இந்த பரிதாபங்களைக் காண நான் என்ன பாபம் செய்தேனோ வென்று அலறினேன். உன் தாயிடம் வந்தேன், உன்னை உன் பிதா பார்த்து மகிழ்ந்தார் என்று கூறியதும், அன்னிலைமையிலும் பரம சந்தோஷப் பட்டாள். மணி ஏற ஏற அந்தம்மாளின் நிலைமையும் ஏறிக்கொண்டே வந்தது. பேசுவதும் ஒடுங்கிற்று. ஆனால் குழந்தை யைப் பார்க்கும் பார்வை மட்டும் சாயவில்லை.

மாலை வேளை மேகங்கள் கூட்டங் கூட்டமாகத் தாறுமாறாகச் சென்று சஞ்சரிக்கின்றன. காற்று சிலுசிலுப்பாக வீசுகின்றது. பக்ஷி இனங்கள் தம் போக்கில் சந்தோஷமாக ஓடியாடிக் கூவுகின் றன. சூரியனும் பகற்பொழுதில் தன்வேலையை முடித்துக்கொண்டு அஸ்தமித்துவிட்டான். இருளும் சூழவாரம்பித்தது. முத்தம்மா ளின் வாழ்க்கை நாடகமும் முடிந்துவிட்டது. அவளுடைய ஒரு பிறவியின் வேலையை முடித்துக்கொண்டு அவள் ஆவி பக்ஷிகளைப் போல ஒரு நொடியில் பறந்து, சூரியனைப்போல ஜீவிய வாழ்க்கை அஸ்தமித்துவிட்டது. அவள் குடும்பத்திலும் என் மனத்திலும் இருள் சூழ்ந்துவிட்டது. அதற்குமேல் என்ன இருக்கின்றது.

அதிகாரிகளின் உத்திரவு பெற்றுக்கொண்டு உன்னை அன்பு டனும் கண்ணீர் பெருகவும் என் வீட்டிற்குக் கொண்டுவந்தேன். அத்தினமே உன் தந்தையும் தன் காதலியைத் தேடிக் கொண்டு பறந்து விட்டார் என்ற செய்தியைக்கேட்டு வெம்பினேன். முட்டிக்கொண்டேன். என்னுடைய விசனங்களுக்கு உன் முகத் தைப் பார்ப்பதே சற்று ஆறுதல் உண்டாக்கியது.

பின்னர் வழக்கு நடந்தது. ரகஸியமல்ல. பகிரங்கமானதே யாகும். ஒரு அல்ப ஆசைக்கு இரு உயிர்களைப் பலி வாங்கிவிட்ட

போதிலும் அந்த மனிதனை தூக்கிலிட்டுவிட மட்டும் என் மனம் இடங்கொடுக்கவில்லை. எப்படியாவது உயிர் தப்பினால் போது மென்று தோன்றியது. ஆதலால் வீடு வாசல் நகை நட்டு முதலிய வற்றை விற்று செலவு செய்து வழக்காடியதில் தீபாந்திர சிக்ஷை விதிக்கப்பட்டது. அன்று தண்ணிமேல் ஏற்றும்பொழுது அம் மனிதனைக் கண்ணால் கண்ட பிறகு இதுபரியந்தம் அவருடைய எந்த தகவலும் எனக்குத் தெரியாது.

உன் தாயார் அன்று, என் மோகத்தைத் தீர்க்கவந்த மோகனுவ தாரா! என்று அழைத்த அதே பெயரால் உன்னை அன்று முதல் அழைத்து வருகிறேன். மோஹன்! உன் தாயார் வைத்திருந்த எருமை, பசு இரண்டையும் கொண்டு உன் தாயாரைப்போலவே சில காலம் பிழைப்பு நடத்தி வந்தேன்.

கேவலம் சிறு குழந்தையாகிய உன்னை விட்டுவிட்டுப் போய் வீடு விடாக அலைய முடியாதுபோனதால் அத்தொழிலை விட்டு மாடு களையும் விற்று அதைக்கொண்டு ஒரு சிறிய காய்கறிக்கடை வைத்துக் கொண்டு அன்று முதல் இன்று வரையில் பிழைத்து உன்னை என் னுயிர்போல வளர்த்து வருகிறேன். கடையில் போட்டி அதிகமாகி விட்டதால் தெருவில் விற்க வாரம்பித்துவிட்டேன். இதுதான் உன் பிறப்பு சரிதை. கண்ணே! மோஹன்! என்னுருயிர் மைந்தா! நான் முதலிலேயே சொன்னேனே! கண்ணீர் விட்டுக் கதறுகிருயே! வேண்டாம்...மனந்தேறு. இதற்காகத்தான் உனக்கு இவ் விஷ யத்தையே சொல்லாமலிருந்தேன். மோகன் ... எழுந்திரு ... கோயிலுக்குச் சென்று ஸ்வாமிதரிசனம் செய்துவிட்டு வரலாம்." என்று தேற்றினாள்.

மிகவும் பரிதாபகரமானதும் துக்ககரமானதுமான தன் னுடைய சரிதையைக் கேட்ட மோஹனனின் மனம் பதறுவதும் உருகுவதும் வியப்பா! தன் தாயிடத்திலிருந்த வாஞ்சைக்குத் தன் மேலும் அளவு கடந்த பாசத்துடன் வளர்க்கும் கல்யாணியம்மாளின் பெருந்தன்மையும், விச்வாசமும் மோஹனனை வியக்கும்படிச் செய்தன.

எத்தனை மனந்தேறியும் அவனால் அடக்கவே முடியவில்லை. தாயின் கரத்தால் தன்னைக் கல்யாணியம்மாளின் கையில் கொடுத்த காக்ஷியும், அவள் கட்டிலில் தவிக்கும் காக்ஷியும் அவன் அகக் கண் முன்பு திரைக்காக்ஷிபோன்று நாடகமாடுகின்றது. ஓர் பித்தன் போலானான். பேசமாட்டாமையினால் சரேலென்று எழுந்து கல்யாணியம்மாளின் காலில் விழுந்து வணங்கி "உங்களுடைய வாழ்க்கையையும் த்யாகம் செய்துவிட்டு என்னை வளர்க்கும் உங்கள் உதார குணத்தை என்னென்று கூறுவேன்?

தாயே! என்னன்னையின் ஆவியும் அவளுடைய பரிசுத்தமான சக்தியும், என் பிதாவின் ஜோதியும் தங்கள் ஜீவனில் ஐக்யமாகி விட்டதாகவே நான் நினைக்கிறேன். ஆத்திரம் பொங்கிய உங்கள் மூர்க்கக் கணவனின் செய்கைக்கே நீங்களும் கை கொடுத்திருந்தால் என் கதி என்னவாகும். எல்லாம் அம்மாயாவியின் லீலைகள்தான். தாயே! வாருங்கள்; கோயிலுக்குச் செல்லுவோம். அந்த கடவுளின் கருணையினாலும் உங்கள் ஆசியினாலும் என் பெற்றோரின் அனுக்ரகத்தினாலும் நான் உங்கள் விருப்பப்படியே எப்பாடாவது பட்டு உத்யோகம் செய்து உங்கள் குறையை நீக்குகிறேன்." என்று உறுதி கூறினான். பின்னர் இருவரும் எழுந்து கோயிலுக்குச் சென்றார்கள்.

---

## 3-வது அதிகாரம்

### சிறுவனின் முயற்சி—பரிதாப சரிதை

உலகத்தில் மக்களுக்கு எத்தகைய துக்கமோ மனக் கலக்கமோ உண்டாகிய காலத்தில் பகவானின் சன்னிதானமாகிய கோயிலுக்குச் சென்று அக் கருணாமூர்த்தியின் ஆனந்த தரிசனாம்ருதம் உண்டால் மேற்குறித்த வியாதி நீங்கி சாந்தி ஏற்படுவது சகஜமல்லவா! இனிமையான

கோகில கானம் போன்ற சங்கீதங் கேட்டாலும் சற்று சாந்தி உலகில் இன்ப நிலை யடைந்து சஞ்சரிக்கலாம். இவ் விரண்டும்மக்கள் அறிந்தனுபவிக்கும் பெரிய நிதர்சனமானதாகும்.

மோஹனனும் கல்யாணியம்மாளும் கோயிலுக்குச் சென்றூர்கள். அப்போது ஏதோ பெரிய உத்ஸவமாகையினல் எம்பெருமானின் திவ்விய அலங்கார சேவை மக்களின் மனத்தை யப்படியே கொள்ளை கொண்டது. கூட்டங்கூட்டமாக ஜனங்கள் வந்து தரிசனம் செய்துவிட்டும் தோத்திரம் செய்துவிட்டும் செல்லும் காட்சி பரமாநந்தத்தை விளைவித்தது. பக்த கோடிகள் பகவன்னுமாவளியையும், தோத்திரப் பாடல்களையும் தம்தம் மனம் போனவாறு பாடுவதானது இன்னும் சிறிது இன்பத்தை செவிக்கும் இதயத்திற்கும் கொடுத்தது.

நமது வாலிபன் தனது பழங்கதையைக் கேட்டு மனங் குழம்பிப்போயிருந்த சமயம் இந்த அத்புத தரிசனமும், ஆநந்த கானமும் மனக் கலக்கத்திற்கோர் மருந்துபோல விருந்தன; அதிலீடுபட்டிருக்கும் தருணம் ஒரு பக்தர் "தாயாரிருந்தென்ன தந்தை இருந்தென்ன" என்ற வெகு அர்த்த புஷ்டியான பாடலைப் பாடக் கேட்டதும் மோகனின் மனத்தில் பின்னும் சற்று தெம்பு உண்டாகியது.

மோகனனும் மனமுருகி தோத்திரம் செய்த பின்னர் அம்பாள் சன்னிதிக்குச் சென்றுன். "என் தாயின் மனம் களிக்கும்படி; ஓர் வேலையை கடாக்ஷிக்கமாட்டாயா! என் தாயே! த்ருலோக ரக்ஷகி! ஜகத்ஜனனீ!

"பூரணி புராதனி சுமங்கலி சுதந்தரி"

என்ற பாட்டைப் பாடியபடியே அம்பிகையை ஸேவித்தான். ப்ரதக்ஷணம் செய்யத்தொடங்கினன், ப்ராகார ப்ரதக்ஷணம் செய்யும்போது இவனுக்கு முன்னல் இரண்டு பேர்கள் சாதாரணமாகப் பேசுங் குரல் கேட்டது. "என் சார்! வேலைக்கு ஓர் சரியான ஆள் தேவை என்று சொன்னீர்களே! அகப்பட்டுவிட்டானு!" என்று ஒருவரைமற்றொருவர் விசாரித்தார்.

அதற்கந்த மனிதன் "இன்னும் இல்லை. நாளைதான் பத்திரிகையில் ப்ரசுரிக்கலாமா வென்று பார்க்கிறேன். ஒரு விளம்பரம் போடவேண்டுவதுதான் பாக்கி. எத்தனை எம். ஏக்கள், எத்தனை பி. ஏக்கள். எத்தனை வருமானமில்லாத வக்கீல்கள் அப்பப்ப! சொல்லில் அடங்காது. இந்த வேலை இல்லாத திண்டாட்டக் காலத்தில் கும்பல் கும்பலாக வரும் வேடிக்கையைக் கூறவேண்டுமா!" என்றான்.

மற்றவன் :—ஆமாம்! இது என்ன இக்காலத்தில் புதிதல்லவே! எங்கள் ஆபீஸில் அட்டெண்டர் வேலை காலியாயிற்று என்ற விவரம் தெரிந்ததும் கணக்கற்ற பட்டதாரிகள் வந்து குவிந்துவிட்டார்கள். ஒரு B. A. க்குத்தான் அவ்வேலை கிடைத்தது. ஐயோ, பாவம்! பணத்தை ஏராளமாகக் கொட்டி படிக்க வைத்துவிட்டு பின்னர் வேலை இல்லாது திண்டாடுவதென்றால் எத்தனை கஷ்டம் பாருங்கள். வேலை கிடைக்காதவனுக்கு வேலை கிடைக்கவில்லையே என்கிற கவலை. வேலையிலிருக்கும் என்போன்றவர்களுக்கு இக்காலத்தின் கொடுமைக்கிணங்க வேலையை விட்டுப்போகச் சொல்லாதிருக்க வேண்டுமே என்று கவலை. எப்படியும் கவலை விட்டபாடில்லை.

சார்! நீங்கள் பத்திரிகையில் விளம்பரம் செய்ய வேண்டாம். எங்க வீட்டிற்கு வாடிக்கையாக கரிகாய்கள் கொடுக்கும் ஒரு கூடைக்காரி தன் மகனை கஷ்டப்பட்டுப் படிக்க வைத்திருக்கிறாள். பாவம்! பையன் நல்ல புத்திமான். கெட்டிக்காரன். வெகு சுறு சுறுப்புள்ளவன். 8-வது வகுப்பு வரையில் படித்துவிட்டு வேலை கிடைக்காது அலைகிறான். கிழவி தினம் "சாமீ! தயவில்லையா! ஏழைமேலே இரக்கமில்லையா!" என்று என்னைக் கேட்கிறாள். எங்க வீட்டுக்காரிக்கு அவளிடம் அதிக ப்ரீதி. அவள் சதா என்னைத் தொந்திரவு செய்கிறாள். நீங்கள் நேற்று சொல்லியதும் இந்த பையன் நினைவு வந்தது. நீங்கள் தயவு செய்து அந்த ஏழைப்பையனுக்கு வேலை கொடுங்கள்—என்றான். அதற்கந்த மனிதன் "சரி! நாளைய தினம் பகல் 2 மணிக்கு வரச்சொல்லும்" என்றான்.

இந்த சம்பாஷணைகளைக் கேட்டபடியே சென்ற மோகனனுக்குத் தான்; அம்பாளை வேண்டியதற்கு அம்பாள் ப்ரத்யக்ஷமாக வரன்

கொடுத்துவிட்டதுபோலான சந்தோஷமும், தன்னைப் பற்றியும் தன் தாயைப் பற்றியும் உலகம் நல்லபிப்ராயங் கொண்டிருப்பதற்காக மனப்பூர்வமான ஆநந்தமும் கொண்டு கடவுளை மனமாற வணங்கினன்.

இதற்குள் கல்யாணியம்மாளும் ப்ரதக்ஷணத்தில் கலந்து கொண்டாள். அங்கு முன் குறிப்பிட்ட மனிதன் செல்வதைக் கண்டதும் கல்யாணி வழக்கம்போல "சாமீ! கோயிலுக்கு அம்மா வரவில்லையா, இந்த ஏழைமேலே எரக்கமேயில்லியே! இந்த அம்பாளும் கண் திறக்க வில்லையே!" என்று கூறினள்.

இதைக்கேட்ட அம்மனிதன் "ஒகோ! கல்யாணீ! நீயே வந்து விட்டாயா! இப்போதுதான் உன்னைப் பற்றி இப்பெரியாரிடம் பேசினேன். எங்கே மோஹறன் வந்திருக்கிறுனு!" என்று கேட்கும் போது மோஹறனனும் அவர்கள் முன்பு வெகு மரியாதையாயும் வணக்கமாயும் வந்து நின்று வணங்கினன்.

முதல் மனிதன் சந்தோஷத்துடன் மோஹறனனையும் மற்ற மனிதருக்குச் சுட்டிக் காட்டி "ஐயா! நான் இப்போது உங்களிடம் தெரிவித்த வாலிபன் இவன்தான். இந்தம்மாளைப்போன்ற நல்லவர்கள் உலகத்தில் அகப்படவேமாட்டார்கள். இந்த காலத்தில் பெற்ற பிள்ளையாயிருப்பினும் அதை சரியாகச் சிலர் கவனிப்பதில்லை. சொந்தக்காரர்களாயின் அடியோடு லக்ஷ்யமே செய்வதில்லை. இந்த பிள்ளையை தன்னுயிர் போல இந்தம்மாள் மதித்து பிறந்த நாள் முதல் பெரும் பாசத்துடன் வளர்த்து வருகிறுள்.

சில பெண் பிள்ளைகளைப் போல மூடமாக வளர்க்காமல் நல்ல அறிவை யூட்டி சத்மார்க்கத்தில் போதனைசெய்து அவனுடைய;பிற்கால வாழ்க்கைக்கு அஸ்திவாரங்களைப் போட்டுத் தான் ஏழ்மை நிலையிலிருப்பினும் அவன் நன்றுகவிருந்தால் போதும் என்கிற முறையில் வளர்க்கிறுள். பையனும் நல்ல புத்திசாலி. பரம ஏழ்மை நிலையை நன்கறிந்துகொண்டு அந்த தாயாரின் மனங்கோணுமலும் துஷ்ட சகவாஸம் செய்யாமலும் வெகு புத்திமானுக வளருகிறுன்.

இவ்வூரிலுள்ள பிள்ளையார் கோயிலுக்கு அஸ்தமித்தால் சென்று விடுவான். அங்கு பிள்ளையாரை வணங்கிப் பின்னர் அந்த கோயிலி லேயே உள்ள விளக்கில் இரவு 10 மணி வரையில் படித்துவிட்டு வீட்டிற்கு வருவான். அம்மாதிரி எல்லாம் உத்தமமாய் படித்துத் தேறிய சிறுவன் இவன். தாங்கள் தயவு செய்யவேண்டும்.'' என்றான்.

இது கேட்ட அம்மனிதன் மிக்க சந்தோஷத்துடன் மோஹனனை நோக்கி "அப்பா! நாளைக் காலை 8 மணிக்கு இதோ இச்சீட்டிலுள்ள விலாசத்திற்கு வந்து பாரு. நான் உனக்கு வேலை கொடுக்கிறேன். இம்மாதிரி முன்னுக்கு வரும் பிள்ளைகளைக் கண்டால் எனக்குப் பரமப்ரீதி.........சரி....வாரும் போகலாம்'' என்றார். மோஹனனும் அவரிடம் வணக்கமாக நாளை வர ஒப்புக்கொண்டு விடை பெற்றுப் பின் தன் தாயாருடன் கிளம்பினன்.

கல்யாணி யம்மாளுக்குள்ள சந்தோஷத்திற்கு எல்லையே இல்லை. மோஹனனும் தனக்கு ஏற்பட்ட மனக்கலக்கம் தீரும் பொருட்டுக் கடவுள் இம்மாதிரி தன் சன்னிதானத்திலேயே க்ருபை செய்தார் என்று வெகு ஆநந்தமடைந்தான். அவனுக்குள்ள ஒரு சொக்காயையும் துணியையும் இரவே சோப்பு போட்டுத் தோய்த்து காய வைத்தான். மறு தினம் உதயத்தையே எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். இரவு முற்றும் நித்திரையே கொள்ளவில்லை. தன் தாய் தந்தையாரின் அந்தியக் காலத்தின் காட்சியையும், தன் பிறவியின் கேட்டையும், தன்னை இத்தனை பாசமாக வளர்க்கும் கல்யாணியின் அன்பையும் மாறி மாறி எண்ணி! அத்தனை உணர்ச்சிகளை அனுபவித்தவாறு புரண்டான்.

உலகத்து அந்தகாரத்தை யொழித்து மக்களின் கடமைகளைச் செய்ய ஞாபகமூட்டும் பொருட்டு கீழ்த்திசையில் ஆதித்தன் உதயமாகிவிட்டான். காலைநேரத்துக் களிப்பு ஓர் தனித்த இன்பமல்லவா! எல்லோரும் தம் தம் கடமையைச் செய்யக் கிளம்பினர்கள். கல்யாணி யம்மாள் வழக்கம்போல 4 மணிக்கே எழுந்து கரிகாய் சந்தைக்குச்

சென்றுவிட்டாள். மோஹறனனும் அதிகாலையில் எழுந்து தனது காலைக் கடன்களை முடித்துக்கொண்டு ஸ்நானம் செய்து கடவுளுக்குப் பூஜையை செய்துப் பின்னர் வழக்கம்போலச் சமையல் செய்தான்.

கல்யாணியம்மாள் காய்கரிகளை வாங்கி சில தெருவில் மட்டும் விரைவில் விற்றுவிட்டு ஓடோடியும் வீட்டிற்கு வந்து தன் மகனுக்கு உணவளித்து அவனைத் தடவிக்கொடுத்து ஆசீர்வதித்துப் பின்னர் வேலைக்கு அனுப்பி அவனையே பார்த்துக்கொண்டிருந்தாள். மோஹறனனும் தாயாருக்கு வந்தனம் செய்து விடை பெற்றுக்கொண்டு சென்றான்.

நேரே ஆபீஸை அடைந்தான். அது பெரிய ஆபீஸல்ல, ஓர் மோட்டார் கம்பெனி. அங்கு முதலில் கொஞ்ச நாள் வேலை கற்றுக் கொண்டால் பிறகு மோட்டார் ரிப்பேர்கள் செய்யவும் மோட்டார் ஓட்டவும் தெரிந்துகொள்ளலாம் என்று அந்த வகுப்பில் அவனைக் கொண்டு போட்டார்கள். மோஹறனனுக்கு இது பெரிய ஏமாற்றமாகிவிட்டது. தனக்கு ஏதோ சம்பளம் கிடைக்குமென்று எதிர்பார்த்ததற்குச் சம்பளமில்லாத சேவகத்தில் போட்டார்களே என்று சற்று வருத்தமுற்றான்.

இவன் ஏழைப் பையனாகையினால் இம்மாதிரி செய்துவிட்டு சம்பளத்திற்கு இருந்த வேலையை வேறொருவனுக்குக் கொடுத்தார்கள். மோஹறனன் இதையும் கைவிடாமல் பெற்றுக்கொண்டான். 5 ரூபாய் சம்பளங்கொடுத்து முதல் இரண்டு மாதம் கற்றுக்கொள்ளும்படியாக திட்டம் செய்தார்கள். மோஹறன் வெகு சாமர்த்தியவானாகையினால் தன் சுறுசுறுப்பினால் வெகு விரைவில் வேலையைக் கற்றுக்கொண்டான். அதற்குமேல் மாதம் 8 ரூபாய் சம்பளத்தில் மாற்றினார்கள்.

இந்த இடத்தில் காலை 8 மணிக்கு வந்தால் மாலை 5 மணி வரையில் மூச்சுவிட நேரமின்றி மோட்டார் ரிப்பேர் செய்வதும் ரிப்பேர் செய்த கார்களை ஓட்டி ட்ரயல் பார்ப்பதும் வேலை சரியாக நிமிர்ந்துவிடும். ஆனால் 8 ரூபாய் சம்பளம் மிகக் குறைவு. ஆகையி

ஞல் கல்யாணியம்மாளுக்கு இந்த வேலேயில் த்ருப்தி இல்லாது போய்விட்டது. மெல்ல கஷ்டப்பட்டு ஒரு வருட காலம் உழைத்தான்.

மோஹனனுக்கு ஓய்வில்லாத அதிக உழைப்பினுல் உடல் நலம் குன்றி சீக்காகப் படுத்துவிட்டான். அந்த நிலைமையிலும் ரஜா கொடுக்க மறுத்து அவனே வேலேயிலிருந்து நீக்கிவிட்டார்கள். அதனுல் கல்யாணியம்மாள் சற்றும் கவலேயே கொள்ளவில்லே. மோஹனனும் வருந்தவில்லே. தன் உடம்பு குணமடைந்ததும் வேறு வேலேக்கு அலேயவாரம்பித்தான். மீண்டும் சைகில் ஷாப்பிலும் மெக்கானிகல் ஷாப்பிலும் சில மாதங்கள் வேலே கிடைப்பதும், நிற்பதுமாக விருந்தது. நிரந்தர உத்யோகமில்லாது வருத்தமேற்பட்டது.

கல்யாணியம்மாளுக்கு வயஸு ஆக ஆக தேகம் பலவீனப்பட்டுவிட்டதால் முன்போல ஓடியாடி சுற்றியலேயமாட்டாது போய் விட்டது. அதோடு அந்தம்மாளுக்குக் கண்ணில் சிறிது கோளாறு ஏற்பட்டு பாதை கொடுத்துக்கொண்டே வந்தது. அதை கவனியாது கை வைத்தியத்துடன் அலக்ஷ்யமாகவே இருந்துவந்தாள். எப்படியாவது மோஹனனுக்கு 10 ரூபாய் நிரந்தரமான வருமானம் கிடைத்து விட்டால்தான் நிம்மதியாக விருக்கலாம் என்று சதா கல்யாணி எண்ணி வந்தாள்.

மோஹனனும் ஏருத இடம் பாக்கி இல்லே. அலேவதுதான் மிச்சமேயன்றி வேலே கிடைக்கவில்லே. "நாட்டின்நண்பன்," என்கிற பத்திரிகாலயம் மிக மிகப்பெரியது. அந்த பத்திரிகை பல வருடங்களாக நடந்து வருகின்றது. பொதுமக்களிடையே நன் மதிப்பும் அன்பும் பெற்று வளர்ந்து வருவதால் அதன் காரியாலயமும் பெரிதாக விருத்தியடைந்தது.

நமது மோஹனனுக்கு ஏதேனுமொரு பத்திரிகாலயத்தில் வேலே செய்ய ஆவல் உண்டு. ஆகையினுல் "நாட்டின்நண்பன்" என்கிற பத்திரிகாலயத்திற்கு தினந்தோறும் சென்று அங்குள்ளவர்களே "ஐயா! ஏதேனும் ஒரு வேலேயகப்படுமா! வென்று கேட்பதையே வ்ருதமாகக் கொண்டான். அந்த பத்திரிகாலயத்தில் சுமார்

100 பேர்களாவது வேலை செய்கிறார்கள். அதன் சொந்தக்காரர் ஓர் பெரிய தனவந்தர். இயற்கையிலேயே மகா நல்ல குணமும் நல்ல நடத்தையும் உள்ளவர். அவர் இப் பத்திரிகையை ஆரம்பித்த பிறகே அவருடைய பெயரும் புகழும் உலகமெங்கும் பரவியது. தர்மலிங்கம் என்றால் தமிழ்நாட்டில் அறியாதோர் கிடையாது. அத்தனை புகழும் கீர்த்தியும் நிறைந் திருப்பினும் அவருடைய மனத்தில் மட்டும் சதா விசனமும், கலக்கமும் கூடி வதைத்துக் கொண்டே இருக்கும். அதற்குக் காரணம் அவருடைய வாழ்க்கையின் விசித்திரமே யாகும்.

நல்ல அதிர்ஷ்டம் ஒரு புறம் இருக்க துரதிருஷ்டமும் கூடவே சுற்றுவதும் கடவுளின் லீலையல்லவா! அவருடைய பால்யப் பருவம் முதல் வெகு அழகான முறையிலும், புத்திசாலி என்று பிறர் கொண்டாடும் வண்ணமும் நடந்துவந்தார். அவருடைய பெற்றோர்கள் தக்க வயதில் விவாகம் செய்வித்தார்கள். பெண்புக்ககத்திற்கு வரும் முன்பே உலகை நீத்துவிட்டாள்.

பின்னர் மறு விவாகம் நடந்தது. அப்பெண்ணும் முன்னவள் கதியையே அடைந்தாள். இரண்டு மணம் செய்தும் இம்மாதிரியாகி விட்டது. எல்லோருக்கும் மிக்க விசனமாகிவிட்டது. சில தினங்கள் செல்ல மூன்றாந் தாரம் விவாகம் செய்வதற்கு பெற்றோர்கள் ப்ரயத்தனம் செய்தார்கள். தர்மலிங்கத்திற்கோ அது மிகவும் வெறுப்பாகி விட்டது. இரண்டு தரம் விவாகம் செய்தும் தனக்கு ராசி இல்லாது போய்விட்டது. இனி விவாகம் வேண்டாம் என்று மறுத்தார்.

பெற்றோர் பிடிவாதமாக மூன்றாவது மணமும் முடித்து வைத்தார்கள். விவாகம் முடிந்து இவர்கள் வீடு திரும்புவதற்குள்ளேயே விவாகப் பெண்ணுக்கும் அவள் தாயாருக்கும் காலராகண்டு விவாகம் முடிந்த மறு தினமே இறந்தார்கள். அந்தோ! பரிதாபம்! பரிதாபம் இம்மாதிரியான சோதனையும் எங்கேனும் உண்டா! நடக்குமா! தர்மலிங்கத்தின் பெற்றோருக்கும் மனம் உடைந்தது.

தங்கள் சந்ததி விளங்கக் கூடாத ஏதோ ஒரு சாபம் காலைச் சுற்றுவதால்தான் இம்மாதிரி நேருகிறது என்று விசனித்தார்கள்.

தர்மலிங்கத்திற்கோ, அவமானமும் விசனமும் தலை காட்ட முடிய வில்லை. அவருக்குண்டான விசனத்திற்கோர் எல்லையே இல்லை. பெரிய தனவந்தர் வயிற்றில் பிறந்தும் நல்ல அறிவாளி என்ற பெயர் பெற்றும் இம்மாதிரியான ஓர் துக்க சோதனையால் எல்லாம் குன்றி விட்டன.

அவர் வெளியே கிளம்பினால் "ஐயோ பாவம்! மூன்றாந்தாரமும் இறந்துவிட்டாளாமே! இதென்ன கண்ராவி! உங்கள் ஜாதகத்தையாவது நல்ல ஜோஸியரிடம் காட்டி ஏதாவது பரிகாரம் செய்து கொள்ளக் கூடாதா? சின்ன வயதில் இத்தனை கஷ்டம் வந்து விட்டதே என்று உபசாரம் சொல்வது இவரால் தாங்கவே முடியாது தவிப்பார். இதனாலேயே அவர் ஒருவரிடமும் சொல்லாமல் வெளி நாட்டுக்குப் போய்விட்டார்.

182988

இம்மாதிரி சம்பவம் ஏற்பட்டுவிட்டதால் இவருக்குப் பெண் கொடுக்கவே எல்லோரும் பயந்து நடுங்கினார்கள். தங்கள் பெண்ணும் இறந்துவிடுமோ, பெண்டு பாக்ய மற்றவனாக விருக்கிறானே என்று யோசிக்கவாரம்பித்து விட்டார்கள். தர்மலிங்கத்தின் ஜாதகத்தைக் காட்டாத ஜோஸியன் பாக்கியில்லை. ஜோதிட சாஸ்திரத்தின் உண்மையை அறிந்து சொல்லக்கூடிய உத்தம ஜோஸியர் நூற்றுக்கு ஒருவர் தேறுவது அரிது. மற்றவர்கள் வயிற்றுப் பிழைப்பிற்காக வேஷம் போட்டு உளறிக் காசு பறிப்பவர்கள்; சாஸ்திரத்தின் தத்வமறிந்து எப்படி சொல்ல முடியும்!

சர்ப்பதோஷம், கருடதோஷம், ஹத்திதோஷம், மண்ணாங்கட்டி தோஷமென்று வாயில் வந்தவாறெல்லாம் பலபேர் பல மாதிரி கூறி பணத்திற்கு விரயமும், அலைச்சலும் கொடுத்தார்கள். பெற்ற மனம் பித்து என்பதுபோல தம் மகன் சந்தோஷமடைந்து தம் குடும்பம் விளங்கினால் போதும் என்று சொல்லியவைகளை எல்லாம் செய்தார்கள்.

வெளி நாட்டுக்குச் சென்ற மகனைத் திரும்ப அழைத்து வந்து எத்தனையோ தேறுதல்களைக் கூறி நான்காம் விவாகத்திற்கு ஏற்பாடு செய்தார்கள். தர்மலிங்கம் கண்டிப்பாய் மறுத்துவிட்டார்.

எனினும் பெற்றோரின் துன்பத்தைக் கண்டு சகியாமல் ஒரு விதமாக ஒப்புக்கொண்டார். உள்ளூரில் பெண் தேடினால் யாருங்கொடுக்க மாட்டார்கள் என்பது தெரியும்: ஆதலால் இவர்கள் குடும்பத்துடன் யாத்திரைக்குச் செல்வதாகக் கிளம்பிச் சென்று அங்கு ஒரு ஊரில் பெண்ணை விசாரித்துக் கல்யாணத்திற்கு ஏற்பாடு செய்தார்கள்.

இந்த விவாகத்தையும் தர்மலிங்கம் விவாகமாக எண்ணவே இல்லை. சாவைத்தான் எதிர் பார்த்திருந்தார். மனத்தில் உத்ஸாகமே இல்லாது விவாகத்திற்கு இசைந்தார். அவ்வூரிலேயே அதிக ஆடம்பரமின்றி விவாகம் நடந்தேறியது.

தர்மலிங்கத்தின் தாய்தந்தையர்கள் கல்யாணமான உடனே பெண்ணைக்கூட அழைத்துக்கொண்டு செல்ல தீர்மானித்தார்கள். பெண்ணின் பெற்றோருக்கு 2000 ரூபாய் ரொக்கங் கொடுத்து விவாகம் செய்ததால் அவர்கள் பணத்தை வாங்கிக் கொண்டு பெண்ணை யனுப்பிவிட்டார்கள்.

தர்மலிங்கத்தின் பெற்றோர்கள் அவ்வூருக் கருகாமையிலுள்ள க்ஷேத்திரத்திலுள்ள கோயிலுக்கு கல்யாணப் பெண்ணையும் அழைத்துச் சென்று அபிஷேகம் முதலிய ப்ரார்த்தனைகளைச் செய்துகொண்டு இந்த பெண்ணாவது தீர்க்காயுளுடனிருந்து சந்ததி விளங்கச் செய்யவேண்டுமென்று பிரார்த்தித்துக்கொண்டார்கள்.

சுமார் 500 ரூபாய் செலவு செய்து ஏழைகளுக்கு சமாராதனை செய்வித்தார்கள். அன்று கோயிலில் ச்வாமி தரிசனம் செய்து கொண்டு வருகையில் கோயிலிலிருந்த ஓர் பெரியார் இவர்களை நோக்கி "ஆகா! நீங்களா! சௌக்யமா?" என்றார். அதே சமயம் கல்யாணப் பெண்ணைப் பார்த்து முகத்தைச் சுளித்துக்கொண்டு "என்ன முருகேசம்! இந்த சனியன் எங்கே உங்களோடு வருகிறது?" என்றார்.

இக் கேள்வியைக் கேட்டதும் எல்லோருக்கும் தீயை மிதித்ததுபோலாகிவிட்டது. அலறியவாறு "ஏன்! என்ன சமாச்சாரம்?" என்று நடுங்கியபடியே கேட்டார்கள். இதற்குள் அப் பெண்

இவர்களை விட்டு மெல்ல நழுவி ஓடவாரம்பித்தது. உடனே அந்த பெரியார் "இது ஓர் குச்சுக்காரப் பெண்ணல்லவா! இதைக் கட்டிய வன் இதன் அக்ரமச் செய்கையைக் கண்டு சகியாமல் இதை எத் தனையோ அடித்துத் திட்டிப் பார்த்தும் பயனில்லாதுபோகவே இதைத் தள்ளிவிட்டு அவன் பிறங்கு போய்விட்டான். இது நடந்து 5 வருடமாகிறது.

இதன் கூடவிருப்பவர்கள் பெற்றோர் அல்ல. ஒரு கூத்தாடிக் கூட்டம். இப் பெண்ணை வைத்துக்கொண்டு கூத்தாடியும் அக்ரம மாயும் பணம் சம்பாதிக்கிறார்கள். இச் சனியனை உங்களுடன் ஏன் அழைத்துவந்தீர்கள்?. என்றார்" இடிமுழக்கம் போன்ற இவ் வார்த் தையைக் கேட்டு அம் மூவரும் துடித்த துடிப்பைக் கூறவேண்டுமா! எரிமலையே புரண்டு தங்கள்மீது விழுந்துவிட்டதுபோன்று தத்தளித் தார்கள்.

அவர்களுடைய நிலைமை அப்படியே மயக்கம் போட்டு விடு வார்கள்போலாகிவிட்டது. அவர்களுக்கு விஷயமுரைத்த பெரியார் அவர்களின் நிலைமையைக் கண்டு கதி கலங்கி இன்னதென்று விவ ரிக்கமாட்டாது தம்பித்துவிட்டார்.

---

## 4-வது அதிகாரம்

## ஓங்கிய புகழும் ஏங்கிய மனமும்

உலகத்தில் மக்கள் தாங்கள் மனப்பூர்வமாயும், சந்தோஷமாயும் நம்பிக்கையுடனும் செய்த காரியம் முடிவடைந்தால் உள்ளத் திருப்தியும் களிப்பும் உண்டாவது சகஜம். அதே நிமிடம் அந்த காரியத்தில் முற்றிலும் மோசம்போய்விட்டோம் என்பது தெரிந்தால் உடனே அவர்களுடைய இதயமே உடைந்துவிடுவது சகஜமல்லவா? அது

போல தர்மலிங்கத்தின் பெற்றோருக்கும் தர்மலிங்கத்திற்கும் இதயம் உடைந்துபோய்விட்டது.

தாங்கள் ஏற்கனவே நொந்துபோய்விட்ட அவமானத்தினால் எப்படியாவது கல்யாணத்தைச் செய்துகொண்டுபோனால் போது மென்ற நிலைமையில் ரகஸியமாகச் செய்யப்போனது பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்ததுபோலாகிவிட்டதென்றால் அந்த அவமானத்தை எவ்விதம் சகிப்பது. "முன்பு மூன்றும் எமன் வாய்க் கிரையாகிவிட்டதால் துக்கத்துடன் நின்றது. இந்த நான்காவதில் எத்தனை செலவு, எத்தனை அவமானம், எத்தனை தலை குனிவு அடாடா!

நாம் இந்தப் பெண்ணைக் கல்யாணம் செய்தோம் என்று எப்படிக் கூற மனந்துணியும். இனி இதைக் கூறி வெளியிட்டால் பலன்தான் ஏது? இத்தனை பெரிய மனிதர்கள் ஏமாந்துபோனார்களே! என்று நம்முடைய முட்டாள்தனத்தைத் தான் பரிகஸிப்பார்கள். ஆகையினால் இதை இப்படியே விட்டு இதுவும் ஓர் சோதனை என்று தான் மனந்தேறவேண்டும்" என்று தமக்குள்ளேயே முடிவு கட்டிக் கொண்டார்கள்.

பின்னர் தமக்குரைத்த பெரியாரை நோக்கி "ஆகா! அப் படியா செய்தி! இந்தப் பெண்ணைப்பற்றி எங்களுக்கு ஒன்றுமே தெரியாது. யாரோ ஏழை அனாதை என்றும் தனக்கு ஏதாவது ஆதரவளிக்கவேண்டுமென்றும் கேட்டாள். பெண் பார்ப்பதற்கு நன்றாக இருக்கிறாளே! பாவம் ஏதோ வீட்டில் வேலைக்காவது வைத் துக்கொள்வோம் என்ற நோக்கத்துடன் அழைத்து வந்தோம். சனியனின் செய்தி இப்படியா இருக்கிறது. இவளைப்பற்றித் தங்க ளுக்கு எப்படித் தெரியும்?" என்றார்கள்.

அப் பெரியாரும் இதை நம்பினார். இந்த பிசாசு ஒரு காலத் தில் என் மைத்துனனுக்கு வாழ்க்கைப்பட்டது. அதனால் இதன் கதை முற்றும் தெரியும். நல்ல வேளையில் நான் சந்தித்தேனே! சனியன் தொலையட்டும்...நீங்கள் யாத்திரை கிளம்பினீர்களா! எப் போது புறப்பட்டீர்கள்?" என்றார்.

நாங்கள் புறப்பட்டு வெகு நாட்களாயிற்று. இன்னும் வட இந்தியாவையும் சுற்றிப் பார்த்துக்கொண்டுதான் போகப்போகிறோம். ஏதோ இந்த கடவுள்தான் உங்களைக் கொண்டுவிட்டார். இந்த சனியனை வீட்டில் வைத்துக்கொண்டு பின்னும் அவமானமும் நஷ்டமும் அடையாது தடுத்தீர்களே!...நல்லது நாங்கள் வருகிறோம்... என்று நன்றி கூறிவிட்டுப் புறப்பட்டார்கள்.

கோயிலுக்கு சமீபத்திலுள்ள சத்திரத்தில் போய் தங்கினார்கள். மூவரின் மனமும் படும் வேதனையைக் கூறத்திறமில்லை. 2000 ரூபாயும் அதைத் தவிர விவாகச் செலவும் சேலை, நகைகளும் கோயில் செலவுகளும், சமாராதனை முதலிய செலவுகளும் எந்த தெய்வத்திற்கு ப்ரீதி. இதில் ஏதோ மர்மமிருக்கிறது; பூர்வ ஜன்மாந்திர பாவந்தான் இப்படி சுற்றுகின்றது என்று தவிக்கிறார்கள். அன்னாகாரமே கொள்ளவில்லை. அந்தப் பெண் எங்கே எப்படிச் சென்றாள் என்றும் கவனிக்க மனம் வரவில்லை. பூர்வத்தில் பட்ட கடனை ஒழித்ததாகவே எண்ணினார்கள்.

பகல் வெயிலை சத்திரத்தில் கழித்தார்கள். சத்திரத்திற்கு சமீபத்திலுள்ள ஓர் குளத்தில் அன்று மாலையே ஓர் பெண் ப்ரேதம் மிதப்பதாக ஜனங்கள் கூட்டங்கூடி வேடிக்கை பார்த்தார்கள். அந்த ப்ரேதம் இந்தப் பாழும் குடிகேடிதான் என்பதை இம் மூவரும் தெரிந்துகொண்டு சந்தடி செய்யாமல் அவ் வூரைவிட்டுக் கிளம்பி விட்டார்கள்.

வட இந்தியாவிலுள்ள ஸ்ரீராமசந்திரனின் ஜனன பூமியாகிய அயோத்திக்குச் சென்று சுமார் 6 மாத காலம் அவ் விடத்திலேயே தங்கிவிட்டார்கள். பிறகு ப்ருந்தாவனத்தில் ஆறு மாத காலம் தங்கினார்கள். தங்கள் ஊரையோ, நிலம் புலன்களையோ, சொத்துக்களையோ அறவே மறந்து வெறுப்பே உருவமாக அலைந்தார்கள்.

சுமார் இரண்டு வருட காலங்கள் இப்படியே சுற்றித் திரிந்துவிட்டதால் தேகாரோக்யத்திற்குக் குறைவும், மனச்சந்துஷ்டி இல்லாமையினால் பலவீனமும், ஏற்பட்டுவிட்டதால் பிறகு தங்கள்

ஊருக்குத் திரும்பினார்கள். தர்மலிங்கத்திற்கு கல்யாணம் என்ற பதத்தைக் கேட்கவும் வெறுப்பு உண்டாகிவிட்டதால் அடியோடு துறவிபோலாகிவிட்டார்.

அவருடைய பெற்றோர்களுக்கு வயது ஏற ஏற பலவீனமும் மனச்சோர்வும் பெருகி தங்களுக்குள்ள ஒரே குமாரனுக்கு விவாகம் செய்யவும் குழந்தைகள் பிறக்கவும் கண்டு களிக்கும் பாக்யம் பெறாது போய்விட்டதே! இனியாவது அப் பாக்கியம் கிட்டுமா! வென்று ஏங்கித் தவித்து அதே ஏக்கத்தினால் உருகிப்போய்விட்டார்கள். மகனிடம் விவாகமென்று பெயரெடுத்தாலே பெரிய சண்டைக்கு வருகிறான். என்ன செய்வார்கள் பாவம்! தலை விதியை எண்ணிப் பேசாதிருந்துவிட்டார்கள்.

தர்மலிங்கம் இயற்கையிலேயே நல்ல உத்தம குணமுடையவராதலால் சில மைனர்களைப் போலக் கெட்டு அலையாமல் தன் மனத்தை முற்றிலும் வைராக்யத்தில் மாற்றிக்கொண்டு சிறந்த ப்ரம்மச்சாரியாகவே இருந்து எல்லோராலும் மெச்சும்படிக்கு பகவத் கீதையையே ஆதாரமாகப் படித்துவந்தார். தனது பொழுது போக்கிற்கு ஏதேனுமொரு தொழில் செய்தால்தான் மனம் நிம்மதியாகவிருக்கும்; ஆதலால் ஏதாவது ஒரு முறையில் பொது மக்களுக்குப் பயன்படும் விதத்தில் இருக்கும் வண்ணம் செய்யத் தீர்மானித்தார். அதற்குச் சிறந்தது தினசரிப் பத்திரிகையொன்று "நாட்டின் நண்பன்" என்ற பெயரில் ஆரம்பித்தால் அது பயன்படக்கூடியதாயிருப்பதோடு உலக விஷயங்களில் ஈடுபட்டு நாமும் துன்பத்தை மறந்திருக்கலாம் என்று தீர்மானித்தார். அதற்கு பெற்றோரும் சம்மதித்ததால் உடனே வேண்டிய ஏற்பாடுகள் செய்து நல்ல தினத்தில் "நாட்டின் நண்பன்" என்ற பத்திரிகையை ஆரம்பித்துவிட்டார்.

பத்திரிகாலயத்திற்கு வேண்டியபடி யந்திரங்கள், சாமான்கள் எல்லாம் நிரம்பிவிட்டன. தகுந்த ஆட்களும் அந்த ஸ்தானத்திற்குப் பொறுக்கியமைக்கப்பட்டனர். தினசரி சமாச்சாரங்களை வெகு அழகானதும் உணர்ச்சியுடன் கூடியதுமான தலையங்கங்களுடன் ஸ்வார

ஸ்யமாக எழுதும் முறையில் இப்பத்திரிகை ஆரம்பித்த நாள் முதற் கொண்டே பொதுமக்களுடைய கவர்ச்சிக்குப் பாத்திரமாகி பேராதரவு பெற்று வளரவாரம்பித்தது.

தர்மலிங்கமே தலையங்கங்கள் எழுதவும் பத்திரிகாசிரியர் குறிப்புகள் எழுதவும் தொடங்கினர். எந்த விஷயத்தையும் அதனதன் ருசி தெரிந்து அதில் ஈடுபட்டுவிட்டால் அதை அனுபவிப்பவர்களுக்கே அதன் மகிமையும் ஆநந்தமும் விளங்கும். சதா படிப்பவர்களுக்கு படிக்கும் ருசிக்கு ஒப்பாக சாப்பாடு கூட இருக்கமுடியாது. அப்படியே கைவேலை செய்பவர்களுக்கும், நூல் நூற்பவர்களுக்கும், பந்து முதலிய விளையாட்டு விளையாடுகிறவர்களுக்கும் சங்கீதம் பாடுகிறவர்களுக்கும், கேட்கிறவர்களுக்கும் சகஜம்.

சதா தூங்குகிறவர்கள், வம்பு பேசுகிறவர்கள், வீட்டில் நிற்காமல் வீடு வீடாக அலைகிறவர்கள், ஓயாமல் தீண்டி தின்பவர்கள், எந்நேரமும் அலங்காரம் செய்துகொண்டு மினுக்குகிறவர்கள், இதைவிட ப்ரம்மாநந்தம் வேறு எதுவும் கடவுளின் ச்ருஷ்டியிலேயே இல்லை என்று நினைக்கும் கோஷ்டியும் ஒன்று இல்லாமலில்லை.

எல்லாவற்றையும் விடச் சிறந்ததும், தன் மனத்திற்கே பேராநந்தத்தைக் கொடுத்து புத்தியை விசாலிக்கச் செய்து, தேக உழைப்பிற்கும் பங்கமில்லாமல் ஆரோக்யத்தைக் கொடுத்து, பிறரும் கண்டு களித்து அறிவைப் பெருக்கிக் கொள்ளும் சக்தியும் சாதனமும் அமைந்த கற்பனு சக்தியுடன் எழுதும் ஆநந்தத்தைக் காட்டிலும் வேறு எந்த வேலையும் அத்தகைய கவர்ச்சி வாய்ந்த கம்பீரமான மனோகரமான வேலையாகத் தோன்றுது. அந்த அனுபவம் பெற்றோருக்கே அதன் அருமை தெரிய வரும்.

இன்று ஒரு புதிய கற்பனை தோன்றலாம். உடனே அதை எந்த வழியில் சித்தரித்தால் அழகாக விருக்கும் எந்த முறையில் அமைத்தால் மக்களுக்குப் பயன்படும்? அவர்களுக்கு த்ருப்தியாக விருக்கும் என்கிற விஷயத்தில் மனம் லயித்து அதே நினைவுடன் கற்பனை உலகத்தில் நிர்மலமான நெஞ்சத்துடன் சஞ்சாரிக்கும்.

அது ஓர் தனித்த இன்பமாயும் அனுபவமாயும் தோன்றும். அக் காலே பல உருவங்கள், பல சித்திரங்கள், பல இன்ப துன்பங்கள் பற்பல அனுபவங்கள் மனமாகிய காட்டில் காட்டு வெள்ளம் போல ஓடும். அவ்வெள்ளத்தில் உண்டாகிய சத்தை இதயத்தில் அணை கட்டித் தேக்கிக்கொண்டு எழுதவாரம்பித்தால் அதன்பிறகு தனித்த அதிமனோகரமானதும் ருசிகரமானதுமான ஆநந்தம் உண்டாகும்.

தேக்கத்து நீரைக்கொண்டு பயிர் செய்து தானியமாகக் கண்டு களிக்கும் உழவனைப்போல இத்தேக்கத்து விஷயங்களைக் கொண்டு ஒரு அருமையான கதையை—கட்டுரையை, நாவலை—சாகுபடி செய்து பூர்த்தியாக்கிவிட்ட பின்னர் தானியங்கண்ட உழவனைக் காட்டிலும் அதிக சந்தோஷமும், களிப்பும், நூதன சக்தியும், மனத்தில் உண்டாகித் தெம்புங் கொடுக்கும்.

கதைக்கு சம்மந்தமில்லாத இவ்விஷயங்கள் இங்கு எதற்கு என்று சிலர் நினைககலாம். எந்த அனுபவமும் எந்த அருமையும் அதனதன் அனுபவம்பெற்றவர்களிடம் அறிவதுதான் சிலாக்யம். புதிது புதிதாகத்தோன்றும், தோன்றக்கூடிய—தோன்றப்போகும்—எழுத்தாளர்களுக்கு இவை முக்யமென்று தோன்றியதால் கூற முன் வந்தோம்.

கற்பனை யுலகத்துச் சஞ்சாரமின்றி, பிறர் பொருளைத் திருடும் கள்வர்போல பிறருடைய எழுத்தை—கருத்தை— திருடிக் கையாண்டு தாமும் ஓர் எழுத்தாளர் என்ற முறையில் சிலர் முன்னே வருவது இக்காலத்தின் கொடுமையாகவிருக்கிறது. அத்தகையோர் எந்த நாளும் விருத்தியடையவோ, எழுத்து வேலையின் லக்ஷ்யத்தை யடையவோ ஒரு காலும் முடியாது. எழுதும் ஆசையுடையவர்கள் கற்பனு சக்தியை முதலில் சம்பாதித்துக்கொள்ள முயலவேண்டும். அம்முறையில் ஆரம்பித்தால்தான் முன்னுக்கு வரமுடியும். அவர்களுடைய எழுத்தால் பிறருக்குப் பலனும் உண்டு. எழுத்தாளர் ஆய்விடுவது இலேசான காரியமல்ல. அத்துறையிலீடுபட்டவர்களுக்கே அதிலுள்ள கஷ்டங்கள் தெரியவரும். பிறர் பொருளைத் திருடும் தொழிலால் எழுத்தாளராகிவிட முடியாது. இது உண்மை.

என்ற மேற்குறித்த தத்துவத்தை நமது தர்மலிங்கம் வெகு நன்ருக உணர்ந்து கொண்டார். தன்னுடைய புத்தியையும் பெரியோரின் உபதேசத்தையும். முன்னோர் நூல்களைப் படித்த அறிவையும், தனது சொந்தமான—கண்டு கேட்டு அறிந்த—அனுபவத்தையும், அவ்வப்போது உலகம் உள்ள நிலைமையையும் மக்களின் போக்கையும் நன்கு ஆராய்ந்தறிந்தும் இதுபோன்று பல விஷயங்களில் நன்ருக உழைத்து மனத்தைக் கெட்டி செய்துகொண்டு இக்காரியத்தை நாம் செய்யலாம், செய்தால் கட்டாயம் ஜெயிப்போம் என்ற தன்னம்பிக்கை பெற்ற பிறகே இத்தொழிலில் ஈடுபட்டார். ஆதலால் பத்திரிகையின் வளர்ச்சி வெகு விரைவிலேயே விருத்தியாகியது.

தர்மலிங்கத்திற்கு எழுதும் ஆநந்தம் தினே தினே கொழுந்து விட்டு வளர வாரம்பித்ததால் பத்திரிகையும் செழித்தது. மற்றபடி தன்னுடைய வாழ்க்கை இன்பத்தையே மறந்தார். தன் தொழிலில் கீர்த்தியும் அதற்குச் சமமாக லாபமும் கிடைப்பதால் ஐச்வர்யவானுகிக்கொண்டே வருகிருர். ஆனல் அந்த ஐச்வர்யத்தைக் காணக் காண அவருடைய பெற்ருேர்களின் துக்கம் அதிகரித்ததே யன்றி சந்தோஷமே கொள்ளவில்லை. சந்ததி விளங்க ஓர் மார்க்கமுமில்லையே .........மீண்டும் கல்யாணம் செய்வோமாவென்று எண்ணுவார்கள். ஆனல் தர்மலிங்கத்தின் வைராக்யத்தைக் கண்டு நடுங்குவார்கள்.

பெரிய கோட்டை போன்ற வீட்டில் இரண்டு கிழட்டுப் பிணங்களும், வெறுப்பே உருவான தர்மலிங்கமும் இரண்டொரு வேலைக்காரர்களும் தவிர வேறு யாருமில்லை என்ருல் அவ்வீட்டில் அழகேது. ஆநந்தமேது. தர்மலிங்கம் தனக்குக் கிடைக்கும் ஐச்வர்யத்தை தாராளமாக தானதர்மம் செய்து தன் பெயருக்கேற்ற தர்மலிங்கம் இவனே என்ற புகழ்மாலையைச் சூட்டிக் கொண்டார்.

இதற்கிடையில் 5—6 வருடங்கள் ஓடி மறைந்தன. அவருடைய விவாகத்திற்கு அவரது பெற்ருேர்கள் அப்போதும் ஆசைப்பட்டுக்கொண்டே இருந்தார்கள். ஆனல் துணிந்து பெண் கொடுக்க யாரும் முன்வராமையினல் மிக்க விசனப்பட்டு அதே பிதற்றலாகப் பிதற்றிக்கொண்டிருந்தார்கள். தர்மலிங்கத்திற்கு

விவாக விஷயத்தில் ஏற்பட்ட சம்பவத்தினுல் மனம் வெறுத்து உடைந்துபோய்விட்டது. எனினும் தன் பெற்ருேரின் தவிப்பும் ஏக்கமும், தன்னுடைய பருவ காலத்தின் தனி வாழ்க்கையின் விசனமும் நாளடைவில் மனத்தைத் தாக்காமலிருக்க முடியுமா! எந்த விஷயத்தில் பெற்ருேரை திருப்தி செய்தாலும் த்ருப்தியாகுமா?

ஏராளமான பணத்தைப் பெற்ருேரிடம் கொடுக்கும்போது. அவர்கள் மனம் பதறிக் கலங்கிக் கண்ணீர் விடச்செய்கிறதே யன்றி செல்வத்தைக் கண்டு சந்தோஷம் எப்படி உண்டாகும். தர்மலிங்கமும் எத்தனை புகழும் கீர்த்தியும் இருந்தும் தன் வாழ்க்கையில் ஒரு தெம்பும் சந்தோஷமும் ஜோதியும் இல்லாது போய்விட்டது; ஒரு குழந்தை இல்லாத வீடு காடன்ருே! என்று சதா எண்ணுவான்.

இவ்வெண்ணம் வளர வளர இதுகாறுமிருந்த வெறுப்பும் விரக்தியும் சற்று விலகி விவாகம் செய்து கொள்ளலாமாவென்கிற ஆவலும் உதயமாகவாரம்பித்தது. இவனுடைய பத்திரிகாலயத்தில் குமஸ்தா வேலை பார்க்கும் சதாசிவம் பரம ஏழை; பெரிய குடும்பி. அவருக்கு இவர்களுடைய சகலமான ஆதிவரலாறும் தெரியும். இப்போது இவர்களுடைய மனக்கிலேசமும் நன்கு அறிவார்.

அவருடைய கடுமையான ஏழ்மை நிலைமையின் நிமித்தம் அவர் 5-ம் தாரமாகத் தன் மகளைக் கொடுத்து தன்னுடைய வறுமையையும் போக்கிக்கொண்டு இவர்களுடைய குடியின் விளக்கையும் ஏத்தலாமா......ஆயுளிருந்தால் ஜீவிக்கின்ருள்; இல்லையேல் விதிபோல நடக்கட்டும். இவ்விஷயத்தைப்பற்றி விசாரித்துப் பார்ப்போம் என்று துணிந்துவிட்டார்.

வறுமையும் தலை சிறந்து குடும்பத் தொல்லையும் கடனும் அதிகரித்தன. குழந்தைகளும் வருடம் ஒன்ருக சுமார் 13 குழந்தைகள் ஒன்றன்பின் ஒன்ருக உண்டாகி குடிக்கக் கூழுக்கும் உடுக்கக் கந்தைக்கும், இருக்க நிழலுக்கும், படுக்கப் பாயிக்கும் சங்கடப்படும் தவிப்பும் அதிகரித்துவிட்ட காலை எப்படியாவது பிழைக்கும் வழி யகப்பட்டால் போதும் என்று தவிப்பது இயற்கையல்லவா! அலை

காற்றில் அகப்பட்ட கப்பலுக்கு எங்கேனும் ஒரு ஆதாரம் கிடைக்குமாவென்று தத்தளிப்பதுபோல சதாசிவத்தின் கதியும் ஆகி விட்டது.

ஒரு தினம் பத்திரிகாலயத்தில் வேலை முடிந்ததும் பத்திரிகாலயம் சாத்தப்போகும் சமயம் ஒரு உல்லாசமான தம்பதிகள் இடுப்பில் ஒரு குழந்தையை அலங்காரமாகத் தாங்கியும், கையில் வெகுஅழகாக ஒரு குழந்தையை ஆநந்தமாகப் பிடித்துக்கொண்டும் பத்திரிகாலயத்திற்கு வந்து தமக்கு வேண்டிய பல புத்தகங்களை வாங்கிக்கொண்டதோடு, அம் மாதரசி ஏதோ சில கட்டுரைகளும் சிறு கதைகளும் எழுதியிருப்பதாயும் அவற்றை இப் பத்திரிகையில் ப்ரசுரிக்கவேண்டுமென்றும் கேட்டார்கள்.

அந்த தம்பதிகளின் அன்யோன்யமான அன்பின் அழகும் அக் குழந்தைகளின் கம்பீரமான வசீகரமும் அக் குழந்தைகளை இடையிடையே அவர்கள் கொஞ்சி முத்தமிட்டுச் சீராட்டும் அருமையும் காண தர்மலிங்கத்தின் மனதில் ஏற்கெனவே புகைந்து கொண்டிருந்த ஏக்கம் அதிகரித்து'' இம்மாதிரியான பாக்யம் நமக்கில்லாது போய்விட்டதே! அந்தோ! இப் பரந்த பாரத நாட்டில் உள்ள முப்பத்தாறு கோடி மக்களில் நான்தானு இத்தகைய துர்ப்பாக்கியத்தைச் செய்து பிறந்தேன்'' என்று எண்ணும்போதே கண்ணில் நீர் முட்டிவிட்டதை வெகு தளுக்காகச் சமாளித்துத் துடைத்துக்கொண்டான்.

அவர்கள் கையிலிருந்த குழந்தை வெகு சந்தோஷமாக சிரித்துக்கொண்டே தர்மலிங்கத்தின்மீது தாவி, அவனுடைய மேஜை மீது வைத்திருக்கும் ஓர் சலவைக்கல்லால் செய்துள்ள காந்தி சிலைமீது பாய்ந்து அதைத் தடவியும் ஆரவாரம் செய்தும் மழலைச் சொல்லால் பேசியும் வெகு சந்தோஷப்பட்டது.

இது கண்ட தர்மலிங்கம் மிக்க களிப்படைந்து குழந்தையை எடுத்துக் கட்டித் தழுவி முத்தங்களிட்டு "பாப்பா! இதோ! இந்த பொம்மையை நீயே எடுத்துக்கொண்டுபோய் விளையாடு.'' என்று தன் முழு மனத்துடனும் அந்த பொம்மையைத் தூக்கிக் கொடுத்து

அதன் பெற்றோரை அதைப் பெற்றுக்கொள்ளும்படியாக வற்புறுத்தினான். அவர்களும் பரம சந்தோஷத்துடன் அதைப் பெற்றுக் கொண்டு வந்தனமளித்துவிட்டு விடை பெற்றுச் சென்றார்கள்.

தர்மலிங்கம் அக் குழந்தையையே தலை மறையும் வரையில் நின்று பார்த்துக்கொண்டிருந்த பின்னர் உள்ளே வந்தான். ஏதோ ஒரு ஜோதி தோன்றி மறைந்து பழைய இருள் வந்து மூடிவிட்டது போலச் சோர்ந்துபோய் அப்படியே பெருமூச்சுடன் சோப்பாவில் வந்து உட்கார்ந்தான். அவனால் சகிக்கக்கூடாத வேதனையும் துக்கமும் அன்று அபாரமாகப் பொங்கி எழுந்து கண்ணீர் பெருகிக் கொண்டே இருக்கிறது. தனது பழைய நான்கு விவாகங்களின் காட்சிகளும் கண் முன்பு தோன்றி வேதனையை உண்டாக்கிவிட்டன. இனி தனக்கு இஜ்ஜென்மத்தில் இப் பாக்கியம் வருமா! என்று ஏக்கம் பிடித்து அக் குழந்தையின் மோகன வடிவத்திலேயே மனம் லயித்துப்போய் விசனமே உருவாய் உட்கார்ந்துவிட்டான்.

ஏற்கெனவே இவ்விஷயத்தில் ஏக்கம் பிடித்துவிட்ட தர்மலிங்கத்தின் பெற்றோர்கள் தர்மலிங்கத்தின் அன்றைய சம்பவத்தையும் அவன் கண்ணீர் பெருக்குவதையும் கவனித்து அபாரமான சோகத்தையடைந்து "கடவுளே! எங்கள் குலத்திற்கோர் விளக்கை ஏற்றமாட்டாயா!" என்று தவித்து ஒரு புறம் துடிக்கிறார்கள். மனைக் கழகான ஓர் இல்லக்கிழத்தியும், அதிமனோகரமான குழந்தைகளும் இல்லாத வாழ்க்கையோர் வாழ்க்கையா என்ற பெருமூச்சு மூவரிடத்திலிருந்து ப்ரம்மாண்டமாகப் போட்டியிட்டுக் கிளம்பியது. ஒருவர் முகத்தையொருவர் காண சகிக்கவில்லை. ஓடும் கண்ணீரைத் தடை செய்யவும் முடியவில்லை. என்னே பரிதாபம் பாவம்!...

வரதக்ஷிணையின் அலங்கோலத்தை விளக்கிக்காட்டும் துப்பறியும் நாவல்

இன்பஜோதி அல்லது

பிள்ளைவீட்டாரின் கொள்ளை.

விலை ரூ. 1—4—0.

## 5.வது அதிகாரம்.

### பட்ட மரத்தில் ஒட்டு மாங்கனி

உலகத்தில் வியாதியஸ்தர்கள் தம் வியாதி நீங்கினால் போதுமென்றும், பசிக்கொடுமைக்காரன் பசி தீர்ந்தால் போதும் என்றும், கடன்காரன் கடன் துலைந்தால் போதுமென்றும், வறுமையாளன் வறுமை நீங்கினால் போதுமென்றும் சமயத்தை எதிர் நோக்கி ஏங்குவது சகஜமல்லவா!

சதாசிவன் முன்பு தெரிவித்த தன் தீர்மானத்தை தன் மனைவி மக்களுடன் கலந்து ஆலோசித்து ஓர் முடிவு செய்துகொண்டு இந்த விஷயத்தைத் தெரிவிப்பதற்குச் சமயத்தையே எதிர் பார்த்துக் கொண்டிருந்தான். அன்று நடந்த சம்பவத்தை முற்றும் கவனித்து வந்த சதாசிவன் அத் தருணத்தை விடாது உபயோகிக்க எண்ணி இவர்கள் முன்பு வெகு வணக்கத்துடனும் பயபக்தியுடனும் வந்து வணங்கிப் பேசாது நின்றான்.

இதைக் கண்ட தர்மலிங்கம் தன்னையொருவாறு தேற்றிக் கொண்டு சதாசிவம் ஏதோ பணம் யாசிப்பதற்காக வந்திருக்கிறான் என்று எண்ணி "என்ன விசேஷம்! என்ன வேண்டும்?" என்று தன் உதாரகுணத்து வழக்கம்போலக் கேட்டான்.

சதா:—எஜமான்! எனக்கு பொருள் ஒன்றும் வேண்டாம், தங்களுடைய தயவுதான் வேண்டும். நான் ஓர் ஏழைக்குடும்பி. தங்களின் குமாஸ்தா (வேலைக்காரன்) தங்களுடைய பூர்வ சரிதை முற்றும் நானறிவேன். தங்கள் மூவருடைய விசனத்தின் எல்லை யையும் நான் வெகு நாட்களாக அறிந்துவருகிறேன். உங்கள் விசனத்தையும் போக்கி, என் வறுமையையும் போக்கிக்கொள்ள

வெகு நாட்களாக ஆசைப்படுகிறேன். ஏழை, அடிமை. அதைத் தெரிவிக்க அஞ்சி சமயத்தையே எதிர்பார்த்திருந்தேன்.

ஐயனே! இன்று அக் குழந்தையின்பால் தாங்கள் கொண்ட மோகத்தையும்; அது பிரிந்த பிறகு தாங்களடையும் துன்பத்தையும் கண்டு மனம் வருந்துகிறேன். ஈசன் அன்று எழுதிய தலையெழுத்தை இனி யாருக்கும் யாராலும் மாற்றமுடியாது. ஆகையினால் நான் பழங் கதைகளை யோசிக்கவில்லை. நீங்கள் எஜமானர். நான் வேலைக்காரன். இந்த வார்த்தையைக் கேட்பது சரியல்லதான். இருப்பினும் நான் சமயத்தை உத்தேசித்துக் கேட்கத் துணிந்தேன்.

நானோ பெரிய சம்சாரி. இறந்தது போக 13 குழந்தைகள். உயிருடன் இருக்கின்றன. எனது மூத்த மகளுக்கு 17 வயதாகிவிட்டது. பரம ஏழ்மை நிலைமையின் கொடுமையினால் இன்னும் விவாகம் செய்யும் வகையில்லாது விழிக்கிறேன். தங்களுக்குப் பெண் கொடுக்க ஜனங்கள் யோசிப்பதையும் நானறிவேன். கடவுள் விட்ட வழியாகட்டும். தாங்கள் சம்மதித்தால் என் மகளை நான் கொடுக்கச் சித்தமாகவிருக்கிறேன். நான் மட்டுமல்ல. என் மனைவிக்கும் பூரண த்ருப்தி. என் மகளும் தங்களைப் பதியாயடையப் பெருமையுடன் காத்திருக்கிறாள். கடவுளின் கிருபையினால் இம் முறையாவது உங்கள் குடிக்கோர் கொழுந்து விடும் என்று நம்புகிறேன்.

தங்களுடைய அந்தஸ்திற்கு இது மிகவும் பொருத்தமற்றது என்பதை நான் அறியாமலில்லை. நீங்கள் யோசித்து பதில் கூறுங்கள்". என்று வெகு வினயமாயும், நம்பிக்கையுடனும் தெரிவித்தான்.

இம்மாதிரி ஒரு வார்த்தையையாவது தாம் கேட்கப்போகிறோம் என்று கனவினும் கருதாத இம்மூவரும் அம்ருததாரை போன்ற இவ்வார்த்தையைக் கேட்டதும் இதுகாறும் இருளில் அகப்பட்டுத் தபித்துக்கொண்டிருந்தவர்களுக்கு ஏதோ புதிய ஜோதியும், பாதையும்தெரிவதுபோலான புத்துணர்ச்சியும், சந்தோஷமும் உண்டாகி முகம் மலர்ந்தது.

தர்மலிங்கத்தின் தந்தை சதாசிவத்தின் இரு கைகளையும் பிடித்துக்கொண்டு "சதாசிவம்! நீங்கள் சொல்லும் வார்த்தை உண்மையானதா அல்லது கேலியாகக் கூறி எங்களைச் சோதிக்கின்றீரா! உண்மையைச் சொல்லும்" என்று கெஞ்சலாகக் கேட்டார்.

சதா:—ஐயனே! நான் கடவுள்மீது ஆணையாக உண்மையில் என் மகளை முழு மனத்துடன் தத்தம் செய்து தருகிறேன். இது வீண் கேலிக் கூத்தல்ல. இதைத் தாங்கள் முக்காலும் நம்பலாம். என்னிடம் நம்பிக்கையாயின் உங்கள் சம்மதத்தை உடனே தெரிவிக்கலாம். வேண்டுமாயின் பெண்ணையும் அழைத்து வருகிறேன்.— என்றார்.

முருகேசத்திற்கும் அவர் மனைவிக்கும் கூறத்திறமற்ற சந்தோஷம் தலைக்கேறிவிட்டது. எப்படியாயின் விவாகமானால் போதும்; குடிக்கோர் குல விளக்கு தோன்றினால் போதுமாகையினால் அந்தஸ்தையும் மற்றதையும் அவர்கள் சற்றும் லக்ஷயம் செய்யவில்லை. தர்மலிங்கத்திற்கும் இது பரம த்ருப்தியையே கொடுத்தது. பெற்றோரும் மகனும் சேர்ந்து யோசித்தார்கள். கடவுள் இனியுமா சோதிப்பார்! அக்கடவுளின் கருணை பிறக்குமாயின் பட்டுப் போன மரத்திலும் துளிரவிடலாகாதா! ஆகையினால் நாம் இதைக் கட்டாயம் மறுக்காமல் அந்த ஏழையையும் மகிழ்வித்து நாமும் களிப்போம்" என்று முடிவு செய்து கொண்டார்கள்.

பிறகு சதாசிவத்தினிடம் வந்து "ஐயனே! நாங்கள் இது காறும் தவித்த நோய்க்கு மருந்து கொடுத்துக் காக்கும் மருத்துவரே போலானீர்கள். நாங்கள் எங்கள் கனவிலும் கருதாத பேருதவியை உம்மால் பெற்றதை எந்த ஜென்மத்திலும் மறக்கமாட்டோம். எங்கள் குலவிளக்கு எப்படியாவது எரிந்தால்போதும். நாங்கள் மிக்க சந்தோஷமடைகிறோம். இன்று வெள்ளிக்கிழமையாதலால் தாங்கள் உடனே கார் எடுத்துக்கொண்டுபோய் தங்கள் மனைவியையும் மகளையும் நல்ல சகுனம் பார்த்து அழைத்துக்கொண்டு வாருங்கள். சுபம் சீக்கிரம் என்பார்கள். ஆகையால் இன்றிரவே

இதை தீர்மானித்து முடித்து விடுவோம். இந்த காரியம் முடியும் வரையில் வெளியில் தெரியவேண்டாம்.'' என்றார்கள்.

சதாசிவம் அபாரமான சந்தோஷத்துடன் வண்டி எடுத்துக் கொண்டு சென்றான். மனைவியிடத்தில் விஷயத்தைத் தெரிவித்தான். இது கேட்ட அந்தம்மாளும் பரம சந்தோஷமடைந்து உடனே பெண்ணை யழைத்துக்கொண்டு கிளம்பிவிட்டாள்.

இவர்கள் புறப்படும்போதே பசு மாடும் கன்றும் ஓட்டிக் கொண்டு செம்பு நிறைய பாலுடன் பால்காரன் வந்தான். இரண்டாவது, கோயிலில் அந்தி வேளை பூஜையின் மணியடித்தது. இவ்விரண்டு சுபசகுனங்களிலும் இவர்கள் கட்டு மீறிய சந்தோஷத்துடன் கடவுளைப் பிரார்த்தித்து தீர்க்காயுளைக் கொடுத்துக் காப்பாற்றவேண்டுமென்று வேண்டிக்கொண்டபடியே தர்மலிங்கத்தின் வீட்டிற்கு வந்தார்கள்.

இவர்கள் வந்து இறங்கி படியேறும்போது, கல்யாணத்திற்கு ஊர் அழைக்க அனேக ஸ்திரீகள் அலங்காரத்துடன் மேளத்துடன் அவ்வீதியில் வந்தார்கள். இது கண்ட முருகேசனும் அன்னம்மாளும் அபாரமான சந்தோஷத்தை யடைந்து அவர்களை வரவேற்று அழைத்துச் சென்றார்கள்.

கல்யாணப் பெண்ணுக்கு 17 வயதுக்குத் தக்க வளர்ச்சியும் நல்ல வசீகரமும், காம்பீரமும், சாந்தமும் பொலிந்து விளங்கின.

பணக்காரர்கள் வீட்டுப் பெண்களைப்போல தொட்டிப்பூ கொட்டடி, கெட்டிக்கரை, சவரன் புட்டா முதலிய சேலைகளும் வைர ஆபரணங்களும், படாடோப அலங்காரங்களும், தளுக்கு மினுக்குகளும் ஏது? முகத்து நிறைய பவுடரும் தலையை தாறுமாறாக வாரியும் அலங்காரங்கள் செய்துகொள்ள இவ் வேழைச் சிறுமிக்கு ஏது?

கடவுளால் கொடுக்கப்பட்ட இயற்கை வனப்பும், வசீகரமும் தவிர வேறு அலங்காரங்கள் ஏதுமின்றி சாதாரண சுத்தமான 2 ரூபாய் விலையுள்ள நீல வர்ண மில்லு சேலையும், ஒரு சீட்டி ரவிக்கையுமே அணிந்திருந்தாள். கருநாகப் பாம்புபோல நெளிந்து தொங்

கும் இயற்கையான தலைப் பின்னலும்,முகத்தில் பளிச்சென்ற குங்குமப் பொட்டும், கையில் இரண்டு கண்ணாடி வளையல்களும், கழுத்தில் மஞ்சள் நூல் சரட்டில் சிறிய கண்ணாடி கலர் மணிகள் கோர்த்த மாலையொன்றுந் தவிர அவள் தேகத்தில் குண்டுமணி பொன்கூடக் கிடையாது.

இந்த ஏழ்மைக் கோலமே அவ் வனிதாமணிக்கு வெகு பொருத்தமாயும் அழகாயும் இருந்ததால் மூவருக்கும் பெண்ணைப் பார்த்தவுடனே மனத்ருப்தியுடன் பிடித்துவிட்டது. பெண் எல்லோரையும் வணங்கினாள். மனப்பொருத்தமே போதும். ஜாதகம் பாரத்துப் பார்த்துச் செய்ததெல்லாம் வீணாகிவிட்டது. இந்த கல்யாணத்தை கடவுள்மீது பாரத்தைப் போட்டு ஒன்றுமே பார்க்காமல் செய்துவிடுவது என்று தீர்மானித்துவிட்டார்கள்.

இவர்களுக்கு முக்யமான சொந்தக்காரர்கள் இரண்டொருவரை அழைத்து புரோகிதரை வைத்துக்கொண்டு சம்ப்ரதாயப்படி அன்றே நிச்சயதார்த்தத்தை (பெண் வீடு மிகவும் சிறியதாகையால் பிள்ளை வீட்டிலேயே) முடித்து விட்டார்கள். பெண்ணுக்கு அன்றே அங்கிமிடமே ஒரு ஸெட்டு சகல நகைகளையும் உள்ளிருந்து எடுத்துப்போட்டு உயர்ந்த சேலைகளையும் வாங்கிக் கொடுத்தார்கள். பெண்ணின் பெற்றோருக்கும் சேலை, வேஷ்டி சன்மானம் கொடுத்தார்கள்.

அடுத்த புதனன்றே முகூர்த்தம் நிச்சயமாகிவிட்டது. இவர்கள் இக் கல்யாணத்தை வெகு ரகஸியமாகவே முடிக்கத் தீர்மானித்திருந்தார்கள். ஆகையால் யாருக்கும் தெரிவிக்கவில்லை. இவர்களுடைய பூர்வீக க்ராமத்திற்குப் பக்கத்தில் மிகவும் வரப்ரசாதியான சந்தான கிருஷ்ணன் கோயிலிருக்கிறது. அவவூரை விட்டு இவர்கள் வந்த பிறகு அங்கு அதிகம் செல்வதே இல்லையாதலால் அக் கோயிலிலேயே இவ விவாகத்தைச் செய்ய தீர்மானித்தார்கள்.

பெண்ணின் பெற்றோருக்கு ரொக்கமாக 10 ஆயிரம் ரூபாயை தாராளமான மனத்திருப்தியுடன் கொடுத்ததோடு, கிராமத்திலுள்ள

தங்கள் வீடுகளில் ஒன்றையும் அவர்களுக்குக் கொடுத்துவிட்டார்கள். புதன்கிழமை சந்தானகிருஷ்ணன் கோயிலுக்கு எல்லோரும் சென்று வெகு ஆநந்தமாயும் சிறப்பாயும் கோயிலிலேயே விவாகத்தை முடித்துவிட்டார்கள். இம்முறையாவது சோதிக்காமலிருக்கும்படி கடவுளை வேண்டித் தொழுதார்கள்.

விவாகம் முடிந்ததும் அனேக தான தருமங்களை வழங்கினார்கள். சதாசிவத்தின் குமாஸ்தா வேலையை நீக்கிவிட்டு அவரை கிராமத்து வீட்டிலேயே ஹாய்யாக இருந்தபடி 10 ஆயிரம் ரூபாயையும் சரியான முறையில் லேவாதேவி செய்தும், இப் பத்திரிகையை அந்த கிராமத்தைச் சுற்றியுள்ள ஊர்களுக்குப் பரவச்செய்து அந்த வியாபாரத்தையும் நடத்திக்கொண்டும் சுகஜீவியாக காலந் தள்ள ஏற்பாடு செய்துவிட்டதோடு தங்களுடைய நிலங்களை மேல்பார்வை பார்க்கும் காரியதரிசியாகவும் நியமித்துவிட்டார்கள்.

சதாசிவம் பரம சந்தோஷத்துடன் இவைகளுக்கு இசைந்து தன் பழைய கஷ்டங்களை அடியோடு மறந்துபோய் ஆநந்த சாகரத்தில் அகமகிழ்ந்தார். கிராமத்திலிருந்தபடியே மற்ற பிள்ளைகளை பக்கத்து ஊரிலுள்ள பள்ளிக்கூடத்திற்கு அனுப்பிப் படிக்க வைக்கத் தொடங்கினர்.

கல்யாணமாகிய உடனே தம்பதிகளை அழைத்துக்கொண்டு வந்து மருமகளை தன் கண்ணிலும் இனிய பொருள்போல முருகேசனும் அன்னம்மாளும் பாவித்து, அதி மேன்மையாயும் வாஞ்சையாயும் அன்று முதலே அவளையோர் தேவதையைப்போல நடத்தவாரம்பித்தார்கள். தர்மலிங்கம் தன்னுயிரே தன் மனைவி என்று கருதி மிக்க அன்பும், காதலும் ததும்ப அவளை நேசிக்கத் தொடங்கினன்.

லலிதா என்கிற பெயருக்கு ஏற்றவாறு அப் பெண்மணி வெகு லலிதமாயும், மரியாதையாயும் தன் மாமி மாமனைப் பெருந்தன்மையான முறையில் மதிப்புடன் தொழுது வந்தாள். தனக்கு திடீரென்று உண்டாகிய அதிர்ஷ்டத்தால் கர்வப்படாமல் வணக்க

மாயும் குணவதியாயும் தன் கணவனுக்கு நிழல் போலவும் இருக்கத் தொடங்கினாள்.

தர்மலிங்கமும் லலிதாவும் பாலும் தேனும்போல இல்லறம் நடத்துவதைப் பார்த்து பரமானந்தமடைவதை விட அவர் பெற்றோர் களுக்கு வேறு வேண்டுமா! தர்மலிங்கம் லலிதாவை தற்கால நாகரிகப் படிக்கு இங்லீஷ் படிப்பு, சங்கீதம் கைவேலைகள் முதலிய வற்றில் பழகவேண்டுமென்று ப்ரியப்பட்டு அதற்கெல்லாம் உபாத்தி யாயர்களை வைத்துக் கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்தான்.

லலிதாவும் அவர்கள் மனங்கோணாது எல்லாவற்றையும் கற்றுக் கொண்டு வெகு விரைவில் பாடம் செய்துவந்தாள். முன்பு எத்தனை விசனத்திலாழ்ந் திருந்தார்களோ, அத்தனை சந்தோஷம் இப்போது உதயமாகிவிட்டதுபோல, இவர்கள் எதிர்பார்த்திருந்தபடி கடவுளின் கருணையினால் லலிதா கர்ப்பவதியானதை யறிந்ததும் கட்டு மீறிய களிப்புடன் லலிதாவை தம் கண்ணில் வைத்து இமையினால் மூடிப் பாதுகாத்து வந்தார்கள். தர்மலிங்கம் உள்ளூறப் பெருமகிழ்ச்சி யடைந்து பூரித்தான். எப்போது நாட்கள் செல்லும். குழந்தை பிறக்கும் என்று எதிர்பார்க்கத் தொடங்கிவிட்டார்கள்.

பட்டுப்போன மரத்தில் ஒட்டு மாங்கனிகள் கிடைத்ததுபோல லலிதா தேஜோமயமான ஓர் பெண் மகவையும், ஓர் ஆண் மகவை யும் ஏக காலத்தில் இரட்டைச் சூரியன் உதயமாகி இரட்டைச் சந் தோஷத்தைக் கொடுத்ததுபோல தன் மாமி, மாமன், கணவன் மூவரும் களிக்கும் வண்ணம் ஈன்று கொடுத்தாள்.

ஒரு குழந்தைக்கு ஏங்கி இருந்தவர்களுக்கு இரு குழந்தைகள் ஒரே சமயத்தில் கடவுள் கொடுத்துத் தம்முடைய சந்தோஷத்தைப் பெருக்கியதற்கு மட்டற்ற மகிழ்ச்சியை அடைந்தார்கள். சந்தான கிருஷ்ணப் பெருமாளின் ப்ரசாதமாக எண்ணி அபாரமான சந்தோ ஷத்துடன் அக் கோயிலில் அபிஷேக நைவேத்தியங்கள் செய்து அக் கடவுளின் நாமமாகிய "சந்தான கிருஷ்ணன்" என்ற பெயரையே ஆண் குழந்தைக்கும், அம்மன் பெயராகிய ராஜலக்ஷ்மி என்கிற பெயரை பெண்குழந்தைக்கும் வெகு ஆநந்தமாயும் தடபுடலான

ஆடம்பரத்துடனும் நாமகரண மகோத்ஸவத்தை நடத்தி அன்று சுமார் 5000 ரூபாய் வரையில் ஏழைக் குழந்தைகளுக்கு உடையாயும்,ஆகாரமாயும்,பணமாயும் தானம் செய்தார்கள். அவர்களுடைய ஆயுளிலேயே கண்டறியாத ஆநந்தத்தை யடைந்தார்கள். இந்த குதூகலத்தில் சதாசிவனுடைய குடும்பமும் பங்கு பெற்று மகிழ்ந்த தென்று கூறவேண்டுமா!

அன்னம்மாள் தன்னிரு கண்மணிகளைப்போன்ற பேரனையும் பேத்தியையும் தன்னுயிரைவிட உயர்வாக எண்ணி வெகு உன்னத முறையில் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் சீராட்டிப் பாராட்டிப் பாலூட்டித் தாலாட்டி வளர்த்து வந்தாள். ராஜலக்ஷ்மியின் புத்தி கூர்மையும் வசீகரத் தோற்றமும் அவளுடைய குழந்தைப் பருவத்திலேயே ப்ரகாசித்தது. ஆண்குழந்தையோ வெனில் பெண்குழந்தையின் விளையாட்டையும் சுறுசுறுப்பையும் வசீகரத்தையும் எந்த வகையிலும் ஜெயிக்க முடியாது வெகு தூரத்திலேயே பின்னடைந்துவிட்டது. சாமான்களைக் கொட்டியுருட்டி அதம் செய்து ஓயாது அழுது லண்டத்தனம் செய்வதில் முதல் தாம்பூலம் பெற்றிருந்தான். எத்தனை சமாதானம் செய்தாலும் தான் பிடித்த பிடிவாதத்தைச் சாதித்துக்கொள்ளும் மூர்க்கத்தனத்தைக் கவசமாக சிறு குழந்தைப் பருவம் முதலே அணிந்துவிட்டான்.

பின்னும் சிறிது வயது சென்றதும் படிப்பு விஷயத்திலும் கிருஷ்ணன் சற்று மந்தமாகவே இருந்ததால் ராஜலக்ஷ்மியே ஜெயிக்க வாரம்பித்தாள். மற்ற சகலமான நடையுடை பாவனைகளிலும் ராஜத்தின் புத்தியும், செய்கையுமே ஓங்கி வளர்ந்தன.

சந்தானகிருஷ்ணன் சில பையன்களிடம் நேசங்கொண்டு கோலி, பம்பரம், பல் குடுகுடு சப்ளாம்,முதலிய ஆட்டங்கள் ஆடிக் காலத்தைக் கடத்திவிட்டு சில தினம் பள்ளிக்கூடத்திற்கும் போகாமல் படிப்பில் ச்ரத்தை இல்லாமல் திரிவான். இச்செய்கையினால் பெற்றோரும்,மற்றோரும் முதலில் எத்தனை களித்தார்களோ அத்தனை வருத்தமும், கவலையுங் கொண்டார்கள். நல்ல வழியில் நயத்திலும் பயத்திலும் அடித்தும் உதைத்தும் பலவிதத்தில் கண்டித்துப் பார்த்

திம் பயனற்றுவிட்டது. விளையும் பயிர் முளையிலே என்பதுபோல கிருஷ்ணனின் எதிர்காலத்தின் நிலைமை இப்போதைய வாழ்க்கைக் கண்ணுடியில் ப்ரதிபிம்பிக்கத் தொடங்கியது.

பத்து வருஷங்கள் வெகு விரைவில் ஓடி மறைந்தன. ராஜ லக்ஷ்மி மிக்க புத்திசாலியாயும், ஆடம்பரமற்ற எளிய வாழ்க்கை யுடன் அதி மனோகர சிங்காரவதனியாய் உத்தமகுண திலகமாயும் விளங்குகிருள். அவளுடைய 15-வது வயதிலேயே S. S. L. C. பரீக்ஷையில் தேறிவிட்டுப் பத்திரிகாலயத்தில் தன் தகப்பனுருக்குத் துணையாய் உதவி புரிந்து பத்திரிகைத் தொழிலை நடத்தும் சாமர்த் தியம் பெற்று தந்தையை மகிழ்விக்கின்ருள்.

கிருஷ்ணனோவெனில் இன்னும் மூன்ருவது பாரத்தையே மூன்று முறை எட்டி பார்த்துவிட்டு, நான்காம் முறைக்கும் மனு போட்டுவிட்டான். துஷ்ட சகவாசமும் சுருட்டு, பீடி முதலியன பிடிப்பதும், இஷ்டமானபோது வீட்டிற்கு வருவதும், கண்ட இடங் களிலும் திரிவதும், சினிமா, ட்ராமா முதலியவைகளுக்குத் தவருது செல்வதும் தந்தையின் கவுரவத்திற்கே ஹானி தேடும் பாவனையில் முன்னேறி விட்டான்.

"அந்தோ! ஆதியில் குழந்தை இல்லை என்று தபித்ததற்கும் ஏங்கியதற்கும் கடவுள் ஒரே கல்லில் இரண்டு கனிகள் கொடுத் ததுபோன்று கொடுத்தும் முக்கியமான ஆண் மகவு இப்படியாகி விட்டதே! ஆகா! என்ன கொடுமை. பாற்கடலில் அமிருதம் பிறப் பதற்கு முன்பு விஷம் பிறந்ததுபோல அமிருதத்தைவிடச் சிறந்த ராஜ லக்ஷ்மிக்கு முன்பு இக்கொடிய விஷம் பிறந்ததே! என்ன செய்வது?' என்று இம்மாதிரி வருத்தமடைந்து உருகலானுர்கள்.

ராஜமும் தன் சகோதரனுக்கு எத்தனையோ சொல்லியும் அவன் கேட்காது தன்போக்காகவே கவுரவத்தையே மறந்து திரிய வாரம் பித்தான். ராஜம் பெற்ருேருக்கு இன்ப மயமான பாவையாய் விளங்குவதோடு தரும குணத்திலும், காருண்யம், தயை, பச்சாதாபம் முதலியவைகளிலும் தந்தையைப்போலவே—தந்தையைவிட அதிக மாகவே—பிரகாசித்தாள்.

புதிதாக பணத்தைக் கண்ட சிலரைப்போல ஓரேயடியில் தலைதுள்ளி விழாமல் பழய ஏழ்மை ஸ்திதியை மறக்காது அடக்க மாயும் பணிவாயும் உள்ள லலிதாவைப்போலவே ராஜமும் வெகு சிறப்பாயும் எளிய வாழ்க்கையிலீடுபட்டும் தாயாரையே பின் பற்றி நின்ருள்.

தாயை விட ஒரு படி அதிகமாகவே தேசபக்தியுடனும், உலகம் போற்றும் உத்தம தியாகியாம் மகாத்மா காந்தியடிகளின் உயரிய தத்துவத்தில் அன்புகொண்டு தன் வாழ்க்கையில் தன்னுல் கூடிய வரையில் அனுஷ்டித்து வெகு அடக்கமாயும், அஹிம்சாமுறையுடனும்—வெளிக்கிளம்பி அட்டகாஸம் செய்யாது—மனப்பூர்வமான பக்தியுடனுடனும் விளங்கினுள்.

தினந்தோறும் பத்திரிகாலயத்திற்கு தன் தந்தையியுடனேயே வந்து முக்யமான விஷயங்களைக் கவனிப்பது, தலையங்கங்கள் போட்டு தந்தைக்கும் காட்டுவது, வெளியிலிருந்து வரும் விஷயங்களை அழகாக எழுதுவது, சிறிய கட்டுரைகள் எழுதுவது முதலிய நிர்வாகங்களை வெகு பொறுப்புடன் கவனிப்பதோடு பத்திரிகாலயத்தின் நிர்வாகத்திலும் பங்கெடுத்துக்கொண்டு வேலையாட்களிடம் சரி வர வேலைகளை வாங்கி மிகவும் சமத்காரமாயும் எல்லோரிடத்திலும் தான் முதலாளி அவர்கள் வேலையாட்கள் என்கிற கர்வமும், அகம்பாவ வித்யாசமுமின்றி சமமாக நோக்கி ஒருவர் மனமும் கோணமலும் வெறுக்காமலும் நடந்து கொள்வாள்.

இந்த பெண்மணியை காரியாலயத்திலுள்ள ஒவ்வொருவரும் ஒரு தேவதையைப்போலி எண்ணி அன்பும் பயபக்தியும் கொண்டு நடப்பார்கள். சதா நகைத்த முகமும் சாந்தமான பார்வையும் சுறுசுறுப்பும் ராஜத்தின் முகத்தில் குடிகொண்டிருக்கும். கம்பீரமாயும் பொருத்தமாயும் தன்னுசனத்தில் வீற்றிருந்து வேலை செய்யும் காட்சியின் அழகே ஓர் தனித்த சுவையுடன் விளங்கியது

பத்திரிகை தோன்றி 25 வருடங்களுக்கு மேலாகியும் அதன் புகழ் குன்றுகள்போல வளர்ந்து தனிச்சிறப்புடன் ப்ரகாசிப்பதால் நம்முடைய மோஹனனுக்கு இப்பத்திரிகாலயத்தில் வேலை கிடைத்

தால் நிரந்தரமாயிருப்பதோடு பத்திரிகையின் மூலம் உலக விஷயங்களையும் அறியலாம்; அறிவும் வளர்ச்சியடையும் என்ற பெரிய ஆசை உண்டாகியதால் அடிக்கடி இந்த பத்திரிகாலயத்திற்கு வந்து தனக்கொரு வேலை கிடைக்குமா வென்று கேட்டுக் கொண்டே இருப்பான்.

வாழுகிற வீட்டிற்கு மர நாயைக் கட்டுவதுபோல எந்த இடத்திலும் தருமம் செய்யும் கையைத் தடை செய்வதற்கு ஒரு மகானுபாவன் ஏற்படுவது இயற்கையல்லவா! தர்மலிங்கத்தின் காரியாலயத்தில் மானேஜராக வேலை செய்யும் நாகலிங்கம் என்பவன் தன் பெயருக்கேற்ப கருநாகம் போலவே சீறுவான். தருமம் என்பது அவனது சொப்பனத்திலும் செய்தறிய மாட்டான்.

அவன் வேலைக்கு வந்து இப்போது 8 வருடங்களாகி விட்டன. வேலைக்கு வந்த நாள் முதல் தன் எஜமானனுக்கு மட்டும் வெகு வெகு நல்லவனாகப் பழகி மிக்க ஊக்கத்துடன் நன்றாகத் தன் வேலையை அதி ஒழுங்காகச் செய்து எஜமானருக்கு நம்பிக்கையும் அன்பும் உண்டாகும்படி நடந்து அபாரமான மதிப்பைப் பெற்று விட்டதனால் அவனுக்கு சம்பள உயர்வும் தனித்த அதிகாரங்களும் கிடைத்து விட்டன.

நமது மோஹன் இங்கு அடிக்கடி வரும்போதெல்லாம் கோயிலில் ச்வாமியை தரிசிப்பதற்கு முன்பு பூசாரியைப் பார்ப்பது போல எஜமானைப் பார்க்கும் முன்பு இந்த மனிதனையே சந்தித்துக் கேட்பான். அவன் சரியானபடி பதிலும் சொல்லாமல் “இன்று வா; நாளை வா!” என்று இழுத்தடித்து வேடிக்கை பார்ப்பான்.

மோஹனனும் தன் முயற்சியை விடாது வந்து விசாரித்துக் கொண்டே இருப்பான். ஒரு தினம் மோஹனன் வழக்கம்போலவே இப்பத்திரிகாலயத்திற்கு வந்து மற்றொரு வேலையாளை ரகஸியமாய் விசாரித்ததில் ப்ரூப் ரீடர் வேலை ஒன்று நேற்றுதான் காலியாயிருப்பதாயும் இந்த மானேஜரைப் பார்க்காமல் நேரே எஜமானரைக் கண்டால் கட்டாயம் வேலை கிடைக்குமென்றும், மானேஜர் 1 மணிக்குச் சாப்பிடப் போகும் சமயம் பார்த்து வரும்படியாக உளவு கூறினான்.

அதைக் கேட்டுக்கொண்டு சென்ற மோஹறனன் அன்றே சரியாக 1 மணிக்கு காரியாலத்திற்கு வந்தான். எல்லா வேலையாட்களும் போஜனம் செய்ய வேறிடத்திற்குச் செல்வோரும், சென்று வருவோருமாக விருந்தார்கள்.

மோஹறனன் எஜமான் இருக்கும் அறைக்கு நேரே தைரியமாகப் போய்க் கொண்டிருக்கையில் சந்தான க்ருஷ்ணனும், நாகலிங்கமும் ஜோடியாக ஸிகரெட்டும் கையுமாக எஜமானன் அறைக்கு வெளி ஹாலில் உலாவிக்கொண்டிருந்தவர்கள் இந்த ஏழைச் சிறுவனைக் கண்டதும் சீறிவிழுந்து, "ஏய் திருட்டுப் பயலே! வெளி கேட்டைத் தாண்டி எப்படியடா உள்ளே தைரியமாய் வந்தாய்! எந்த சமயம் என்ன அகப்படும் அடித்துக் கொண்டு போகலாம் என்று வந்தாயோ? வெளியே போ :......ஊம்...என்று நாய் போல மேலே பாய்ந்து குலைத்தார்கள்.

இது கேட்ட மோஹறனுக்குத் தூக்கி வாரிப்போட்டது. சுறுக்கென்ற வார்த்தை பாணம்போலப் பாய்ந்தது. அப்போதும் தைரியத்துடன் "ஐயா! நான் பரம ஏழைதான். இருப்பினும் தாங்கள் கூறியதுபோல என் காலில் ஒட்டிய தூசியும் செய்யாது. இம்மாதிரி மரியாதை கெட்டுப் பேசாதீர்கள்'' என்று நயமாகக் கூறி முடிப்பதற்குள் இருவரும் கோபங்கொண்டு "என்ன! என்ன! மரியாதை கெட்டுப் பேசுகிறோமா! மரியாதையா! மரியாதையா!.........என்று உளறிக் கொண்டே, மோஹறனனை இரண்டு அறைகள் விட்டுக் கழுத்தைப் பிடித்துத் தள்ளிக்கொண்டே வரத் தொடங்கினர்கள். இத்தனைக்கும் மகா உத்தமனும் சாந்த ஸ்வரூபியுமான மோஹறன் "ஹா! கடவுளே!'' என்று பெரிதாகச் சத்தமிட்ட வண்ணம் கண்ணீர் பெருகக் கல்லாக அவ்விடத்தை விட்டு அசையாமல் நின்றுவிட்டான்.

182988
சென்னை 600 008

PRINTED AT TATA PRESS, & PUBLISHED BY V. M. PARTHASARATHY, MADRAS.

## ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதிய நாவல்கள்.

26½ ரூபாய்க்கு 31 நாவல்கள்.

"ஜகன்மோகினி" சந்தாதாரர்களுக்கு குறைந்த விலை.

| | ரூ. | அ. | ரூ. | அ. |
|---|---|---|---|---|
| வைதேகி (2 பாகங்கள்) | 2 | 8 | 2 | 0 |
| ராதாமணி (2 பாகங்கள்) | 2 | 8 | 2 | 0 |
| சாருலோசன (2 பாகங்கள்) | 2 | 8 | 2 | 0 |
| பத்மசுந்தரன் | 2 | 8 | 2 | 0 |
| காதலின் கனி | 2 | 8 | 2 | 0 |
| நவநீதகிருஷ்ணன் | 2 | 0 | 1 | 12 |
| ருக்மிணிகாந்தன் | 2 | 0 | 1 | 12 |
| சாமளநாதன் | 2 | 0 | 1 | 12 |
| தியாகக்கொடி | 2 | 0 | 1 | 12 |
| மங்களபாரதி | 2 | 0 | 1 | 12 |
| சண்பகவிஜயம் | 1 | 12 | 1 | 8 |
| கௌரீமுகுந்தன் | 1 | 12 | 1 | 8 |
| ஸாரமதி | 1 | 12 | 1 | 8 |
| சோதனையின் கொடுமை | 1 | 8 | 1 | 4 |
| பரிமளகேசவன் | 1 | 4 | 1 | 0 |
| உத்தமசீலன் | 1 | 4 | 1 | 0 |
| சுகந்தபுஷ்பம் | 1 | 0 | 0 | 14 |
| கதம்பமாலை | 1 | 0 | 0 | 14 |
| கோபாலரத்னம் | 0 | 14 | 0 | 12 |
| புத்தியே புதையல் | 0 | 14 | 0 | 12 |
| பட்டமோ பட்டம் | 0 | 10 | 0 | 8 |
| நளினசேகரன் | 0 | 8 | 0 | 6 |
| வீரவஸந்தா | 0 | 8 | 0 | 6 |
| மூன்று வைரங்கள் | 0 | 8 | 0 | 6 |
| படாடோபத்தின் பரிபவம் | 0 | 8 | 0 | 6 |
| பிச்சைக்காரக் குடும்பம் | 0 | 8 | 0 | 6 |
| ஆனந்தஸாகர் | 0 | 8 | 0 | 6 |
| பக்ஷமாலிகா | 0 | 6 | | |
| ஜயஸஞ்சீவி | 0 | 4 | | |
| சுகுணபூஷணம் | 0 | 4 | | |
| அம்ருததாரா | 0 | 4 | | |

ரூ. 5-க்கு மேற்பட்டு ஒரே சமயத்தில் வாங்குபவர்கள் மொத்த விலையில் மூன்றிலொரு பங்கைக் குறைத்து மீதியை அனுப்பினால் தபாற் செலவின்றி புத்தகங்களை அனுப்புகிறோம்.

"ஜகன்மோகினி" ஆபீஸ்,

26, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

Devi Press, Madras

Jaganmohini (June 1936) Regd. No. M. 2210.




தலை வலிக்கு

Headaches

ஆஸ்பிரினை விலக்குங்கள்

இருதயக் கோளாறுகளையும் விலக்குங்கள்




அம்ருதாஞ்சனை உபயோகியுங்கள்

அமிர்தாஞ்சன் டிபோ,

சென்னை கல்கத்தா பம்பாய்.